விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை (09.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசுடன் இணைந்து செயற்பட புலம்பெயர் தமிழர்கள் விருப்பம்



## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்கள் அரசாங்கத்துடன் இணைந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவிரும்புவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜேர்மனிய நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோதே. பீரிஸ் இதனைத் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

### அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான

## புதிய திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிக்க அரசு தடைவிதிப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் புதிய திட்டமுன்மொழிவுகளை அங்கீகரிக்க வேண்டாமென அரச அதிபர்களுக்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள செயற்பாடுகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்க முடியும். புதிய திட்டங்கள் எதனையும் அரசின் அனுமதியின்றி அவர்களினால் செய்ய முடியாது என வடமாகாண அரசாங்க அதிபர்களுக்கு அரச செயலணிக் குழுவின் செயலாளர் திவாரட்ண அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசின் புதிய அறிவிப்பினால் பாட (16ஆம் பக்கம் பார்க்க)


## கூட்டமைப்புடனான சந்திப்புக்கு நாளை திகதி தீர்மானிக்கப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)


மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத் தரப்பினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விரைவில் இடம்பெறவுள்ள முக்கிய சந்திப்புக்கான திகதி தொடர்பில் நாளை புதன் கிழமை மாலை தீர்மானிக்கப்படவுள்ளதாக அரசாங்க மட்ட தகவல்கள் தெரிவித்தன.

மகிந்த ராஜபக்ஷ இவ்வாரம் வெளிநாடு பயணமாகவிருந்த நிலையில் அந்த விஜயம் பிற்போடப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பு தொடர்பில் நாளை புதன் கிழமை மாலை அரசாங்க மட்டத்தில் தீர் (16ஆம் பக்கம் பார்க்க)



வரவு செலவு திட்டம் தொடர்பில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விவாதிப்பதை படத்தில் காணலாம்.

## ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை



### அமெரிக்கா ஆதரவளிக்குமாம்

(புதுடில்லி)

ஐ.நா. மன்ற பாதுகாப்பு கவுன்ஸில் சீரமைக்கப்படும் போது அதில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

தனது (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பில் ஆஸியின் போக்கில் மாற்றம் தேவை

### மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

(சிட்னி)

இலங்கை அகதிகளுக்காக அவுஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் தடுப்பு முகாமை அமைத்துள்ளமையை அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக் குழு கண்டித்துள்ளது. கிறிஸ்மஸ் தீவில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மற்றும் ஏனைய அகதிகள் வரையறைக்கு உட்பட்ட அத்தியாவசிய சேவைகளையே பெறுகின்றனர்.

அத்துடன் சட்ட உதவி, மன உளைச்சல் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொது நூலகத்தை பார்வையிட ஒன்றரை மணி நேரம் அனுமதிக்கப்படும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்புத்துறை)

யாழ். பொது நூலகத்தை திங்கட் கிழமை மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 5.00 மணி தொடக்கம் 6.30 மணி வரையான ஒன்றரை மணி நேரம் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். நூலகம் தொடர்பான கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை (16ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயங்கள் வடக்கில் அகற்றப்பட மாட்டாது

### மீள்குடியேற்ற அமைச்சர் திட்டவட்டம்

(கொழும்பு)

வடக்கில் அமைக்கப்பட்டிருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தையும் அகற்றுவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமென மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு பொதுமக்களின் குடியிருப்பு இடங்கள் அனைத்தையும் திருப்பிக் கையளிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும் கூட சில இடங்களில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் தேவை அத்தியாவசியமானதாக இருப்பதன் காரணமாக அவற்றை அகற்ற முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார். (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலி வடக்குப் பிரதேசத்தில் உடனடியாக மீள் குடியமர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/221, ஜே/222, மற்றும் ஜே/ 223 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உடனடியாக மீள்குடியமர்வு மேற் கொள்ளப்படவுள்ளது. நேற்று நடைபெற்ற வலிகாமம் வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் அமைச்சரும் வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

தெல்லிப்பழையிலுள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் முரளிதரனின் ஒருங்கிணைப்புடன் ஆரம்பமான இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரசாங்க திணைக்களங்கள், சபைகள் மற்றும் அதிகார சபைகள் ஆகியவற்றின் பிரதேச பொறுப்பதிகாரிகளும் வலி வடக்கு பிரதேச கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஒவ்வொரு துறையாக எடுத்து ஆராயப்பட்டு துறைசார் வேலைத்திட்டங்கள், அவற்றை அமுல்படுத்துதல் மற்றும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அபிப்பிராயங்கள் பெறப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதில் மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், வீட்டு வசதி, குடிநீர், கழிப்பறை, கல்வி, விவசாயம், கமநல அபிவிருத்தி, கால்நடை, கடற்றொழில், சுகாதாரம், மின்சார வசதி, பிரதேச சபையின் செயற்பாடுகள், சமுர்த்தி நடவடிக்கைகள், உலக வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் மீளெழுச்சித் திட்டங்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள், கிராமஎழுச்சித்திட்டம், மாகாணவிசேட நன்கொடைத்திட்டம், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி ஆகிய துறைசார் செயற்பாட்டுத்திட்டங்கள் விரிவாக ஆராயப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

குறிப்பாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடிய அமைச்சர், கண்ணிவெடி அகற்றும் அமைப்பினரின் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்ததுடன் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

உடனடியாகவே ஜே/ 221, ஜே/ 222, ஜே/ 223 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் தற்சமயம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என எதுவும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திய அமைச்சர், இராணுவ முகாம்கள் மட்டுமே உள்ளன எனவும் தெரிவித்தார். (ச)

# கோதுமை மாவு நுகர்வுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

கோதுமை மா பாவனைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குழுவொன்றை நியமித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

கோதுமை மா மூலமான உணவுப் பொருட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தீவிர பிரசாரங்களும் கோதுமை மா விலை உயர்வும் கிராமிய மற்றும் சிறு நகரப் பகுதிகளில் பாண் விற்பனையை குறைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது சிலர் கோதுமை மா நுகர்வை பயங்கரவாத நடவடிக்கையாக சித்திரிக்கின்றனர். எனவே நாம் இப்பிரசாரங்களுக்கு எதிர் பிரசாரங்களை இனங் காண வேண்டியுள்ளது. இதில் அரசாங்கத்தின் பங்களிப்பையும் பெற விரும்புகிறோம்.

பாடசாலை சிற்றுண்டிசாலைகளுக்கு பாண் விநியோகம் செய்வதில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக பாண் விற்பனை குறைந்துள்ளது. பாடசாலை அதிகாரிகள் பாடசாலைக்கு வெளியில் கூட கோதுமை மா மூலமான உணவுப் பொருட்களை விற்க அனுமதிக்கிறார்கள் இல்லை என ஜயவர்த்தன கூறினார்.

இதேவேளை கோதுமை மா உணவுப் பொருட்களை தடைசெய்யும் கொள்கை எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என உள்நாட்டு வர்த்தக அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து பேக்கரி உரிமையாளர்களின் கருத்துக்களையும் செவிமடுக்க விரும்புவதாகவும் அவர் கூறினார். (ச-5)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2010 காலநீடிப்பு

*யாழ்.மாநகரசபையால் 28.10.2010ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் பந்தி 01 இல் கேள்விப்பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி 04.11.2010 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை என அறிவிக்கப்பட்டிருந்தது. அத் திகதியை மேலும் 12.11.2010 ஆந் திகதி பி.ப.3.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.*

மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(சி-1580)


# தனித்திருந்த பெண்ணின் தாலிக்கொடி அபகரிப்பு

(காரைநகர்)

காரைநகர் புது வீதியில் தனித்திருந்த குடும்பப் பெண்ணின் தாலிக் கொடி திருடர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, நேற்றிரவு காரைநகர் புதுவீதி சந்தியில் தனித்திருந்த பெண்ணின் வீட்டிற்குச் சென்ற திருடர்கள் குறித்த பெண்ணின் வாய்க்குள் துணியை அடைத்துவிட்டு கழுத்தை நெரித்து, தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் தேவராஜா அரியமலர் (வயது 55) என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

இவர் வைத்திய பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் பட்டப்பகலில் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். (ச-7, 246)

# பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஒன்றியத்தின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சுமேதா ஜீ. ஜெயசேனவும் பிரதித் தலைவராக சந்திராணி பண்டாரவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தின்போது நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல் முறை திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான 25 சதவீதத்தில் ஒரு வீதத்தை கட்டாயம் பெண்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பது தொடர்பிலான மகஜர் ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்புவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைப் பெண்களின் வளர்ச்சிக்காக பாடுபடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-5)

# சுகவீன விடுமுறை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தாதியர் சங்கத்தினால் கடந்த மார்கழி மாதம் முதல் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகவீனப் விடுமுறை போராட்டம் ஏற்கெனவே திட்டமிட்டபடி நாளைய தினம் சகல அரச வைத்தியசாலைகளிலும் நடைபெறும்.

இப்போராட்டத்தில் சகல தாதிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு போராட்டம் வெற்றி பெற உதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் சங்கச் செயலாளர் பி.சிவயோகன் அறிவித்துள்ளார். (ச-7)

## கிளிநொச்சியில் கைவிடப்பட்டு

# இனங்காணப்பட்ட 121 வாகனங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பரிசோதகர்களால் கடந்த 22, 23, 24ஆம் திகதிகளில் 2 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களும் 300 ஏனைய வாகனங்களும் பரிசோதனை செய்யப்பட்டன. இவற்றில் 121 வாகனங்களுக்கான பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் எம்மால் இனங்காணப்பட்டுள்ளனர். குறித்த வாகன உரிமையாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை (வாகனப் பதிவுப்புத்தகம், பொலிஸ் முறைப்பாட்டுப்பிரதி, கிராம அலுவலகர் உறுதிப்படுத்திய இரு அடையாள அட்டைப்பிரதிகள், வரி அறவீட்டுப் படிவப் பிரதி ஒப்படைத்து மேற்படி வாகனங்களை பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இனங்காணப்பட்ட வாகனங்களின் விபரம் வருமாறு,

41-8881, JR-7191, 24-9516, 77-9104, JH-8296, 21-5772, 270-2738, WPHP-8266, HB-7684, 21-7193, QB-3071, JA-8868, 56-8585, LA-5988, 25-1774, LA-7608, JH-6327, 37-8011, 37-0073, 270-3199, JG-5613, 37-4254, JN-2735, 71-1485, 37-1619, 25-3372, 57-1703, 25-5727, GH-7620, 22-5104, JI-9930, HI-8015, LB-9128, LA-0375, HJ-2616, HJ-0383, JQ-3954, CG-2847, QA-5766, JU-3599, 46-3176, 48-2784, SC-1140, HE-9605, 36-4627, 36-5425, HL-6697, 27-0027, QB-6361, GN-9410, GJ-0744, HF-3041, 30-2623, JI-7093, GP-2925, 54-4800, GX-8741, 57-6195, HE-6026, GY-6893, 36-9010, 59-9886, 48-3252, LA-5186, 251-8598, 68-0226, 63-2037, HH-6101, 54-6293, LB-9120, GG-3821, 47-2308, GN-7245, GO-2846, 56-5713, GZ-8907, LA-3317, JQ-2298, 49-3768, JJ-4923, LB-2708, GS-9949, GG-8760, SB-7223, RV-0056, 9SRI3204, QB-2274, JE-1807, 36-0650, 37-1904, 49-3487, 36-5910, HH-7935, 60-1100, GP-6032, GY-5818, 42-2618, JF-3449, 41-8688, 43-2227, 27-8011, 77-9253, SA-5985, 49-3487, 36-5910, HH-7935, 60-1100, GP-6032, GY-5818, 42-2618, JF-3449, 41-8688, 43-2227, 27-8011, SA-5985, SB-0219, 37-4174, JL-8515, 58-9452. (ச)


**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
**Daanston House**
**Colombo -03**
**T.P. 072 9994777**



செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

# இன்று ஒரு தகவல்

## பானையும் யானையும்

அமைச்சர் ஒருவர் அரண்மனைக்கு காலதாமதமாக வந்தார்.

"ஏன் தாமதம்?" என்று கேட்டார் ராஜா.

"அரசே! நான் சீக்கிரமாகவே புறப்பட்டுவிட்டேன். அந்தச் சமயம் பார்த்து என்னுடைய மகன் நானும் கூட வருகிறேன். என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்து விட்டான். அவனை ஒரு வழியாக சமாதானம் செய்துவிட்டு வருவதற்குள் காலதாமதம் ஆகிவிட்டது" என்றார் அமைச்சர்.

அரசர் சிரித்தார். "என்ன அமைச்சரே! அரண்மனையில் எவ்வளவோ கடுமையான பிரச்சினைகளுக்கெல்லாம் மிகவும் சாமர்த்தியமாக பதில் சொல்லி சமாளிக்கும் உங்களுக்கா ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டம்?" என்று கேட்டார்.

"மன்னா, ஒரு பெரிய யானையை அடக்குவதைவிட, ஒரு பெரிய சேனையை போரில் ஜெயிப்பதைவிட, ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டமான செயல்" என்றார் இவர்.

"அப்படியா சொல்கிறீர்கள்?"என்று சந்தேகமாகக் கேட்டார் ராஜா.

"வேண்டுமானால் நான் அதை நிரூபித்துக் காட்டுகிறேன். அதற்கு நீங்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"கொஞ்ச நேரம் நீங்கள் எனக்கு அப்பாவாக நடிக்க வேண்டும். நான் உங்கள் குழந்தையாக நடிக்கிறேன். நான் அடம் பிடிப்பேன். நீங்கள் என்னைச் சமாதானப்படுத்த வேண்டும்" என்றார் அமைச்சர்.

"சரி!" என்று ஒத்துக்கொண்டார் ராஜா.

இப்பொழுது ராஜாதான் அப்பா. அமைச்சர்தான் குழந்தை.

அமைச்சர் தரையில் உட்கார்ந்து கையைக் காலை உதைத்துக் கொண்டு கத்த ஆரம்பித்தார்.

அதாவது குழந்தை அடம் பிடித்தது.

அப்பாவான ராஜா அருகில் வந்தார்.

"ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"எனக்கு ஒரு யானை வேண்டும்" என்று அழுதது அந்தக் குழந்தை.

அட இதுதானா... என்று சொல்லிவிட்டு ஒரு பொம்மை யானையைக் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். கொடுத்தார்கள்.

குழந்தை மறுபடியும் கத்தியது.

"எனக்கு இது வேண்டாம். நிஜமான யானை வேண்டும்" என்றது.

ராஜா நினைத்தால் முடியாதா?

உடனே ஒரு பெரிய யானையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"அப்பா, எனக்கு இப்பொழுது ஒரு பானை வேண்டும்" என்றது குழந்தை.

ராஜா பார்த்தார். ஒரு பானையைக் கொண்டுவரச் சொன்னார். குழந்தை மறுபடியும் அடம்பிடித்தது.

"நீ கேட்டதை கொடுத்துவிட்டேன். மறுபடியும் ஏன் கத்துகிறாய்?" என்றார்.

"இந்த பானைக்குள் அந்த யானை போக வேண்டும்" என்று கத்தியது குழந்தை.

ராஜா பார்த்தார். "சரி, இந்தப் பானையில் அந்தயானை போக வேண்டும். அவ்வளவுதானே!" என்றார்.

அந்தப் பானையை தரையில் வைத்தார். அதில் அந்த யானையை போகச் சொன்னார்.

யானை அதில் காலை வைத்தது. பானை உடைந்து விட்டது. குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்தது.

"எனக்கு பானை வேண்டும்" என்றது.

"சரி... இன்னொரு பானை கொண்டுவந்து கொடுங்கள்" என்றார். கொண்டுவந்து கொடுத்தார்கள்.

"எனக்கு இந்தப் பானை வேண்டாம். அந்தப் பானைதான் வேண்டும்." என்று கத்தியது.

"அதுதான் உடைந்துவிட்டதே!" என்றார்.

"உடைந்தாலென்ன... அதை மறுபடியும் ஒன்று சேர்த்து பழையபடி பானையாக்கிக் கொடு" என்று பிடிவாதம் பிடித்தது குழந்தை.

ராஜா பார்த்தார். இதற்கு மேல் நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது என்று முடிவுக்கு வந்துவிட்டார்.

"போதும் அமைச்சரே, புரிந்து கொண்டேன். குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டம் தான் என்று புரிந்து கொண்டேன். எழுந்திருங்கள்" என்றார்.

அமைச்சர் அதன்பின் கையைக் காலை உதறிக் கொண்டு எழுந்தார்.

குழந்தைகள் பிடிவாதம் பிடிப்பது ஒரு தனிரகம்தான்.

பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் தரையில் கிடந்து கத்திக் கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து அந்தப் பையனின் அப்பா அவனை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்தார்.

"ஏன்..... பையன் கத்துகிறான்?" என்று கேட்டார்.

"அந்தப் பையன்களுக்குள் ஏதோ சண்டை. அதில் ஒரு பக்கத்துப் பையனின் காதை கடித்துக் கொண்டான். அதுதான் கத்துகிறான்"என்றார் ஆசிரியர்.

"ஐயையோ..... அப்படியானால் என் பையனை உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டுபோக வேண்டுமே" என்று பதறினார் அந்த அப்பா.

"பதறாதீர்கள் சேர். கடிபட்டவன் ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டான். இவன் கடித்துவிட்டு கத்துகிறான்" என்றார் ஆசிரியர்.

"ஏன்?" என்றுகேட்டார் அப்பா.

"இனொரு பக்கத்துக் காதும் வேண்டும் என்று அடம் பிடிக்கிறான் சேர்" என்றார் ஆசிரியர் தன்னுடைய காதைத் தடவிப் பார்த்துக் கொண்டே.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 78 தனியார் பல்கலைக்கழகங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன

உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை முதலீட்டுச்சபையுடன் கல்வி அமைச்சு இணைந்து மேற் கொண்டுவரும் திட்டங்களின் அடிப் படையில் 78 தனியார் பல்கலைக் கழகங்கள் இதுவரை பதிவு செய் யப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் கல்வி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். புதிய கல்வித்திட்டங் களும் மேலதிக வசதிகளும் ஏற் படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். இதனை எட்டுவதற்கு நாம் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க வேண்டும்.

அத்துடன் தற்போதைய கல்வித் திட்டத்தை நாம் தனியார் மயப் படுத்தவில்லை. ஆனால் புதிய தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கத் திட்டமிட்டுவருகிறோம். எமது இந்தத் திட்டங்களுக்கு அமை வாக 78 புதிய பல்கலைக்கழகங் களை இங்கு ஆரம்பிப்பதற்கான பதிவுகள் முதலீட்டுச்சபையில் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் 50 பல்கலைக்கழ கங்கள் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தொழிலாளர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் நம்பிக்கை நிதிய த்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் இல 70, மார்ட்டின் வீதியில், இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குதிறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிதியத்தினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திற ந்து வைப்பார். (ஸ்ரீ-2)

# யுத்தத்தால் முற்றாக சேதமடைந்த பாடசாலை சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் புனரமைப்பு

(சாவகச்சேரி)

கடந்த கால யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் உள்ள சகலகலாவல்லி வித்தியாலயம் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் துரிதமாக புனரமைக்கப்பட்டு நாளை புதன்கிழமை வித்தியாலய அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. தற்போது இவ்வித்தியாலயமானது தற்காலிகமாக வேறு இடத்தில் இயங்கி வருவதுடன் எதிர்வரும் 2011 ஆண்டு ஜனவரி மாதம் முதல் புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-29)

# இராசி பலன்

*09.11.2010*

*(ஐப்பசி 23, செவ்வாய்க் கிழமை)*

*திருதியை முற்பகல் 8.27 மணி வரை*

*கேட்டை முற்பகல் 11.31 மணி வரை*

*இராகுகாலம் 3.05-4.35 மணி வரை*

*சுபநேரம் 10.35-12.05 மணி வரை*

*சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்.*

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், உடல் நலம் சிராகி உற்சாகமடையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிரயாண நன்மையுண்டு.

**இடபம்** கந்தனை வழிபட்டு குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக் கறை காட்டும் சூழ்நிலை உருவாகலாம், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்** இல்லத்தில் நல்ல சம்பவமொன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செல்வாக்கான நாள்.

**கடகம்** அயல்வருடன் ஏற்பட்ட பகை மாறும், உற்சாகமான நாள், உறவினர் சந்திப் பால் உள்ளம் மகிழும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவ செலவுகள் குறையும்.

**சிங்கம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம், தடைப்பட்ட காரியங்கள் மீண்டும் நடைபெறலாம், கடின முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி** பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன யோகமுண்டு, தூரதேசச் செய்தி மகிழ்ச்சியைத் தரும், நண்பர்களின் தேவைக்காக செலவு செய்ய வேண்டி யேற்படலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய நண்பர்களின் சந்திப்புண்டு, உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும், எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும், பொருளாதார நிலை திருப்திகரமாக அமையும்.

**விருச்சிகம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும், சொத்து க்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** அலைச்சல் சற்று அதிகரிக்கும், உடல்நலம் சீராகி உற்சாகப்படும், தொழில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், கனிவான பேச்சுக்களால் சாதிக்க வேண்டிய நாள்.

**மகரம்** பயணத்தால் பலன் கிடைக்கும், உத்தி யோகத்தில் இடமாற்றம், ஊர்மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவ மொன்று நடைபெறலாம்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்போடு காரிய மொன்றைச் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், விழாக்களில் கலந்துகொள்ளும் சூழ்நிலை அமையலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள், வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

வளவன்

# கட்டுரைப் போட்டியில் முதலிடம்

(சாவகச்சேரி)



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செல்வி.றம்யா ஸ்ரீதரன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான சான்றிதழும் பணப்பரிசும் அனுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளி ப்பு விழாவில் வைத்து ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது. (ஸ்ரீ-29)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு நடாத் தப்பட்ட போட்டிகளின் முடி வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங் களைப் பெற்ற மாணவர் களின் விபரம் வருமாறு;

**கட்டுரை**

வி.ஜானுஷா, சி.கோகில வாணி, ந.சரணியா (யா/புற்றளை மகா வித்தியாலயம்)

**சுவரொட்டிப் போட்டி**

செ.துஷ்யந்தினி, ந.சரணியா, கே.தசாஷினி (யா/ புற்றளை மகா வித்தியாலயம்)


**பொது அறிவுப் போட்டி**

எஸ்.காவேரி (புலோலி தெற்கு),க.திருக்குமரன்(பரியாரியார் வளவு, புலோலி), செ.மாதினி (புலோலி தெற்கு)

(ஸ்ரீ-35)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 90 | 60 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 90 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 50 | 50 | 55 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 110 | 110 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 150 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 120 | 160 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 120 |
| கறிமிளகாய் | 120 | 140 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 180 |
| போஞ்சி | 140 | 140 | - |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 40 |



அல்வாய் "கலை அகத்தில்" அண்மையில் இடம்பெற்ற 30 ஆவது அவைக்கூட்டம் (FORUM) "புத்தகப் பண்பாடு" எனும் தொனிப்பொருளில் இடம் பெற்றது. இதில் தெணியான் தலைமையுரையாற்றுவதையும் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் அறிமுகவுரையாற்றுவதையும் தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் சட்டத்தரணி சோ.தேவராஜன் உரையாற்றுவதையும் கலாநிதி த.கலாமணி கலந்துரையாடலின் நிறைவு ரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மூக்குக் கண்ணாடி வழங்கல்

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தினால் கண்பார்வை குறைந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

எனவே கண்பார்வை குறைந்தவர்கள் தமது பகுதி கிராம அலுவலரிடமோ சமுர்த்தி அலுவலரிடமோ அல்லது பொலிஸ் நிலையத்திலோ தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ள முடியும் என அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசங்க ஜசரட்ண தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-70)

## நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு நெல்லியோடைப் பகுதியில் உள்ள நெல்யோடை வீதியையும் ஆவரங்கால் மேற்கு வன்னியசிங்கம் வீதியையும் இணைக்கின்ற குறுக்குவீதி மிக நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இதனால் இப்பகுதி ஊடாக நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் செல்லும் மாணவர்கள் உட்பட பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுதொடர்பாக அப்பகுதிகளில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள் பல கோரிக்கை விடுத்தும் புனரமைப்புச் செய்யப்படாமை கவலை அளிப்பதாக தெரிவிக்கின்றார்கள்.

எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-70)

## மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டியோர்

(கரவெட்டி)

அல்வாய் வட நக்கீரன் சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டுநிறைவை யொட்டி நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் 10 இடங்களைப் பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு;

செ.சண்முகதாஸ் (பொம்மர்ஸ் வி.க), பி.சறோசன் (அண்ணா சிலையடி வி.க), ரி கிருபாகரன் (விண்மீன் வி.க), எஸ். வினுஜெனன் (றேஞ்சர்ஸ் வி.க),கே. கோகுலன் (மகாத்மா வி.க), ஜெ.அன்ரன் உதயராஜ் (விண்மீன் வி.க),பி.மாதவன் (தேவரையாளி), எஸ்.சிவமோகன் (பாரதி வி.க.), மு.ஜெசிந்தன் கலைமகள் வி.க),பி. அருள்தாஸ் (விண்மீன் வி.க). (ஸ்ரீ-24)

## போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள ஆசிரியர்கள்

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கிராமப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களே போக்குவரத்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதியில் இருந்து கிராமப்புறப் பாடசாலைகளுக்கு பலமைல்தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போக்குரவத்து வசதிகள் எதுவும் அப்பகுதிக்கு இல்லாததனால் நடந்து சென்று ஆசிரியர் பணியை முடித்துவிட்டு மீண்டும் கஷ்டமான நிலையில் பிரதான வீதிக்கு திரும்பி வர வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

முன்னர் பஸ் போக்குவரத்து சேவைகள் இருந்தபோதிலும் தற்போது இச்சேவைகள் இல்லாததனால் பல இடர்களுக்கு மத்தியில் பணியாற்ற வேண்டியிருப்பதாகவும் உரிய தரப்பினர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கிராமப்புறப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-10)

## செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவக வலயத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த அதிபர்களுக்கான I.C.T செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் வியாழக்கிழமை வேலணை கணனி வள நிலையத்தில் நடைபெறுமென் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

யாழ்.செய்திகள்

## நாவலர் கலாசார மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வெளிக்கள உத்தியோகத்தர்களால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ''சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி'' நடாத்தப்படவுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் பிராந்திய தாய், சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சு.திருமகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டு சுகாதார விழிப்புணர்ச்சியினையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மணல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பிரதேசத்திலிருந்து அகழப்படும் மணலினை பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேலதிக அனுமதிகள் ஏதும் இன்றி மகேஸ்வரி நிதியத்தில் நேரடியாக பதிவு செய்து உடனடியாக மணலினைப் பெற்றுக் கொள்ளுமாறு மகஸேவரி நிதியத்தின் செயற்திட்ட இணைப்பாளர் த.றஜீவ் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மாதகல் மேற்கு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் எப்போது ?

### அப்பகுதி மக்கள் வினவுகின்றனர்

(மாதகல்)

மாதகல் மேற்கு பகுதியில் தம்மை மீள் குடியேற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்பொழுது மாதகல் மேற்கு பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடங்கியிருக்கிறது. அப்பகுதியில் முன்னர் வசித்த மக்கள் உறவினர் வீடுகளிலும் மற்றும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தின் பல பிரதேசங்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டும் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வரும் நிலையில் மாதகல் மேற்கில் மீள்குடியேற்ற நடவடிக்கை எப்பொழுது இடம்பெறும் என மக்கள் கேட்டுள்ளனர்.

இப் பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ள பொருட்கள் இனம் தெரியாதோரால் சூறையாடப்படுவதாகவும் மரங்கள் தறிக்கப்பட்டு ஏற்றப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் மீள்குடியேற்றம் செய்வதற்குரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-40)

## கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் நெற்செய்கை பாதிப்பு

### விவசாயிகள் கவலை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால் நடைகளால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இக் கால் நடைகளால் நெற்செய்கை பாதிக்கப்படுவதையிட்டு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இப்பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வததாக அவர்கள் உறுதியளித்ததுடன் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கால்நடை வளர்ப்போரை கேட்டுள்ளனர். (ஸ்ரீ-29)

# தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் பிணையில் விடுதலை

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப மாணவர்கள் 21 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணை விதிக் கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் எந்தவொரு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகளில் பிரஸ்தாப மாணவர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று தடைவிதித்துள்ள நீதிமன்றம், அவ்வாறு கலந்து கொண்டதாக தகவல் கிடைக்கும் பட்சத்தில் மாணவர்களின் பிணை அனுமதி இரத்துச் செய்யப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

மாணவர்கள் பல்லைக்கழகம் செல்வது பட்டப்படிப்பை மேற்கொள்ளதானே தவிர, ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வதற்கல்ல என்று மாணவர்களுக்கு அறிவுறுத்திய நீதவான், அரசியலில் ஆர்வம் காட்ட முன்பு பட்டப்படிப்பை நிறைவு செய்துகொள்ளுமாறும் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ஶ்ரீ-2)

# தென்னிலங்கை பல்கலை. மாணவர்களை கண்காணிக்கும் வீடியோ சாதனம்

(கொழும்பு)

தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்களை கண்டு அஞ்சி நடுங்கும் அரசு அவர்களின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதில் தனது முழு வளங்களையும் செலவிட்டு வருகின்றது.

தற்போது மாணவர்களை பல்கலைக் கழகத்திற்குள் கவனிப்பதற்காக காணொளி சாதனங்களை நிறுவியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவிக்கையில், சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முக்கிய பகுதிகளில் காணொளி பதிவு சாதனங்கள் பொருத்தப் பட்டுள்ளன. மாணவர்கள் கூடும் இடங்கள், நூலகம் போன்ற இடங்களில் அவை பொருத் தப்பட்டுள்ளன.

ஏற்கனவே 36 மாணவர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தம்மை இவ்வாறு கண்காணிப்பது தொடர்பில் மாணவர்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். ஆர்ப்பாட்டம் நடத்தியதற்காக மேற்படி மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் சுவரொட்டிகளை ஒட்டிய மாணவர்கள் இருவரை இந்த ஒளிப்படச் சாதனம் பதிவுசெய்ததை அவதானிக்க நிர்வாகம் அவர்களையும் இடைநிறுத்தியுள்ளது. ஆனால் பல்கலைக்கழகங்களில் ஆணும்- பெண்ணும் ஜோடியாக கைகோர்த்தவாறு உலாவரும் மாணவர்களுக்கு இந்த சாதனம் பெரும் இடைஞ்சலாக உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

உயர் தொழில்நுட்பம் உள்ள இந்தக் காலத்தில் இதனைப் பயன்படுத்துவதில் தவறில்லை என சிறீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி கருணாரட்னா தெரிவித்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# முன்னாள் போராளிகளுக்கு முகாம்களிலேயே நீதிமன்ற விசாரணைகளை நடத்த தீர்மானம்

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக புனர்வாழ்வு முகாம்களிலேயே நீதிமன்ற விசாரணைகளை நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்புத்துறை பிரதியமைச்சர் காமினி விஜயமுனி சொய்ஸா இதனைத் தெரிவித்துள்ளார்.

படையினரிடம் சரணடைந்த12ஆயிரம் தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்க உறுப்பினர்களில் 5ஆயிரத்திற்கும் அதிகமானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் எஞ்சியவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் 14 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் புனர்வாழ்வு திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் மற்றும் சரணடைந்தவர்கள் ஆகியோர் தொடர்பில் ஆராய அண்மையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில், கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது இவர்களுக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் காமினி விஜயமுனி சொய்ஸா குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# நாட்டின் தேயிலை ஏற்றுமதி வீதம் உயர்வடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடந்த வருடம் 1.4 பில்லியன் டொலர் வருமானத்தைக் கொடுத்திருந்தது. ஆனால் இந்த வருடம் முதல் 9 மாதங்களில் அது 991.9 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளது.

தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள இந்த உயர்வு அரசுக்கு அதிக மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. எகிப்துக்கான தேயிலை ஏற்றுமதியை பாகிஸ்தானிடமும் பிரித்தானியாவுக்கான ஏற்றுமதியை கென்யாவிடமும் இழந்த அரசு அதனை ரஷ்யா மற்றும் அரபு நாடுகளின் உதவியுடன் நிவர்த்தி செய்துள்ளது. இலங்கைத் தேயிலையானது 52 விகிதம் ரஷ்யாவையும் அதனைந் சார்ந்த நாடுகளுக்கும் 23 விகிதம் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் வடபகுதியில் ஏற்பட்ட கடும் மழைவீழ்ச்சி காரணமாக அதன் தேயிலை ஏற்றுமதி 10 மில்லியன் கிலோவினால் குறைவடைந்ததும் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியின் உயர்வுக்குக் காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ)

# "மறுபாதி" மலர் வெளியீடும் இலக்கிய நூல்களின் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

"மறுபாதி" கவிதைக்கான காலாண்டிதழும் புத்தகக் கூடமும் இணைந்து நடாத்தும் ஆக்க இலக்கிய படைப்பாளிகளின் நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் தங்களின் நூல்களை காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் விரும்பும் படைப்பாளிகள் 0771285749, 0776015039 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திகதி மாலை 3 மணிக்கு மறுபாதி கவிதைக்கான காலாண்டிதழின் முதலாமாண்டு சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறும். (ஶ்ரீ)

# கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு நடாத்தும் கண்காட்சியும் விற்பனையும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கமலராஜன் கலந்து சிறப்பிக்க உள்ளார். (ஶ்ரீ-2)


## 100 கியூப் கோரல் கற்களைப் (முருகக்கல்) பெறுவதற்கான விலை கோரல் விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பிராந்தியத் தொல்லியற் திணைக்கள விலைகோரல் சபையின் தலைவர் அனுமதி பெற்றவர்களிடமிருந்து யாழ்ப்பாணத்தில் அழிவடைந்த கட்டிடங்களில் இருந்து 100 கியூப் கோரல் கற்களைப் (முருகக்கல்) வழங்கவுள்ளவர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைகோரல் விண்ணப்பத்தை 10.11.2010 வரை ஏற்கவுள்ளார் .

மேலதிக விபரங்களை இல-160, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

25.11.2010 அன்று மாலை 2 மணிக்கு பிராந்திய அலுவலகத்தில் விலைகோரல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். அதில் விண்ணப்பித்தோர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் நேரில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

தலைவர்,
விலைகோரல் விண்ணப்ப சபை,
தொல்லியல் திணைக்களம்,
160, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1578)



## யாழ்ப்பாணம் மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றை குத்த கைக்கு வழங்குவதற்கான**

**கேள்வி அறிவித்தல் - 2011**

மேற்படி விடயம் தொடர்பாக 2010.10.29 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் ஏற்பட்டிருந்த தவறுகளின் திருத்தம் வருமாறு,

❖ எமது சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக் கடைகளில் குருநகர் மாட்டிறைச்சிக்கடைகளுக்கு பிணைப்பணமாக ரூபா 7000.00 மும், ஏனைய இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கு பிணைப்பணமாக ரூபா 5000.00 மும் அறவிடப்படும் என்பதனையும், பண்ணை 07 ஆம் இலக்க கடையை கோழிக்கடையாகவும் திருத்தி வாசிக்கவும்.

சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகரசபைக்கு உரியது.

03.11.2010

திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா,
யாழ்.மாநகரசபை முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-1575)



# ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் கந்தசஷ்டியை முன்னிட்டு இன்று செவ் வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு "கலி யுகத்தில் கந்தன்" எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் மற்றும் நாளை புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு "வேலின் மகிமை" எனும் தலைப்பில் ஆசிரியர் கே. கைலைநாதன் ஆகியோர் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர். (ஶ்ரீ-2)







தபால் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜயசேகர நேற்று யாழ். தபால் அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாக கேட்டறிந்தார். இந்நிகழ்வில் வடமாகாண பிரதி தபால்மா அதிபர் வி. குமரகுரு உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். தபால் நிலைய அதிகாரி ஒருவர் யாழ். மாவட்ட தபால் நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக எடுத்துரைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# புலிகளின் சர்வதேச வலையமைப்பில் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது

## ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பில் பாரியளவு பிளவு ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

யார் தலைமைத்துவத்தை ஏற்று வழி நடத்துவது என்பது தொடர்பில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் நோர்வேயில் இயங்கி வரும் நெடியவன் நிதி விவகாரங்களை பொறுப்பேற்றுக் கொள்வதில் கூடுதல் நாட்டம் காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல், கடனட்டை மோசடி மற்றும் காசோலை மோசடி போன்ற பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகளில் நெடியவன் ஈடுபட்டு வருவதால் உருத்திர குமாரனுக்கும் நெடியவனுக்கும் இடையில் இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற நினைவுப் பேருரை ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இலங்கையின் நன்மதிப்பு சரியான முறையில் பிரசாரம் செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் புலி ஆதரவு புலம் பெயர் தமிழர்களும் இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் சிசு மரணவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் சிசு மரண வீதம் ஆயிரத்திற்குப் பத்தாகக் குறைவடைந்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசியாவில் குறைந்தளவு சிசு மரண வீதம் உள்ள நாடாக இலங்கை பதிவாகியுள்ளதாகச் சுகாதார அமைச்சின் பிரதிச் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால குறிப்பிட்டார்.

கடந்த 1945 ஆம் ஆண்டு நாட்டில் சிசு மரண வீதம் ஆயிரத்துக்கு 137 ஆகக் காணப்பட்டதாக தரவுகளில் பதிவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு நட வடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சிசு மரண வீதம் குறைவடைந்தமைக்குக் காரணமாக அமைந்துள்ளதெனவும் அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்ருக்கும் கர்ப்பத்திலும் குழந்தைகளுக்கும் போஷாக்கான உணவுகள் வழங்கப்படுதல் சிசு மரண வீதத்தைப் பெருமளவில் குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கான உரிய பராமரிப்பு மற்றும் சிகிச்சைகள் நாட்டில் சிறந்த முறையில் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இலங்கைப் பணிப்பெண்களின் பிரச்சினைகளை தீர்க்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

இரு தரப்புக் கலந்துரையாடல்களின் மூலமே பணிப்பெண்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறமுடியுமென வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண்கள் தொடர்பாக நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பணிப்பெண்களுக்குள்ள உரிமை தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்கான பெருமளவிலான பணிப் பெண்கள் தமது சேவைக்காலத்தினை முடித்துக் கொண்டு சம்பளத்துடன் நாடு திரும்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பிற்காகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்காகி நாடு திரும்பும் இலங்கைப் பணிப் பெண்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஆன்மீகப் போராட்ட 19 ஆம் ஆண்டு பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் ஆன்மீகப் போராட்ட 19 ஆம் ஆண்டுப் பூர்த்தி விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, வழிபாடு, சுவாமி வீதியுலா என்பன நடைபெற்று இரவு 7 மணிக்கு ஆன்மீக போராட்டம் வெற்றி பெற வேண்டி 108 விடி விளக்குகள் ஏற்றி வைக்கப்படவுள்ளது. (ஸ்ரீ

# குடும்பஸ்தர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்

(கொழும்பு)

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் குளிக்கச் சென்ற பதுளை – ஹஸலக்க என்ற பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவர் நீரில் மூழ்கிய நிலையில் காணாமல் போயுள்ளார்.

இவர் குடும்பத்தாருடன் விடுமுறையைக் களிப்பதற்காக பாசிக்குடாவிற்குச் சென்ற போதே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சேத்தர பண்டார மெதிவெக (வயது 40) என்பவருக்கே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைக்களை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இக்கடல் பரப்பில் எச்சரிக்கை பலகைகள் இடப்படாமையினால் இவ்வாறான மரணங்கள் தொடர்கின்றன எனக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வடக்கில் ஆயிரத்து 861 சதுர கிலோமீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையின் வடக்கில் ஆயிரத்து 861 சதுர கிலோமீற்றர் பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் தற்போது அகற்றப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவிக்கிறது.

இதுவரை 3இலட்சத்து 50 ஆயிரத்து 375 நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகஇராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெத வல குறிப்பிட்டார்.

மேலும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காக ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் அரசசார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# அமைச்சரவை மாற்றத்தின் போது புதிய முகங்களுக்கும் அமைச்சுப்பதவி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19 ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக் காலத்துக்காக பதவியேற்றுக்கொள்ளவுள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து தற்போதைய அமைச்சரவையில் மாற்றங்கள் இடம் பெறும் என்று தெரியவருகிறது.

அதன் போது ஆறு அல்லது ஏழு எம்.பி.க்கள் புதிய அமைச்சர்களாக பதவியேற்கும் சாத்தியம் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி தற்போதைய அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

ஆனால், புதிய அமைச்சுப் பதவிகள் யாருக்கு வழங்கப்படும்என்பது தொடர்பில் இதுவரை உறுதியாக தெரியவரவில்லை.

எனினும் கண்டி, பதுளை, காலி உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு புதிய அமைச்சுப் பதவிகள் பகிரப்படலாம் என ஆளும் கட்சி யின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அதாவது இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய முகங்களுக்கும் அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது சில அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

முருகன் துணை

அருள் மிகு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டி ஐந்தாம் நாள் உற்சவம்

10.11.2010 புதன்கிழமை நண்பகல் 1 மணி தொடக்கம் 6 மணிவரை

நாதஸ்வரக் கானவாரதிகள்
V.K.P.பஞ்சமூர்த்தி
L.S.ஜெயநாதன்
V.K.P.குமரேஸ்

கரவேக சுரபிகள்
T. உதயசங்கர்
N. நந்தகுமார்
M.S. சதீஸ்குமார்

இவர்களுடன் (L.S.ஜெயநாதன் – நல்லூர் பாலமுருகன் ஒழுங்கமைப்பில்) இந்தியாவில் (தமிழ்நாடு) இருந்து வருகை தந்திருக்கும் தவில்வித்துவான் கலைமாமணி கோவிலூர் கல்யாண சுந்தரம் அவர்கள்.

அனைவரும் வருக நாதஸ்வர கானாமிர்தம் பெறுக.

பரிபாலன சபையினர்.

(சி-1574)

# நீரிழிவு, இதய நோயாளர்களுக்கு உகந்த.குடாநாட்டு.உணவுகள் 02

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஆய்வின் முடிவு

செல்லத்துரை பிரசாத்
27ஆம் அணி,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

உணவுப் பொருட்கள் உடலின் குளுக் கோசு மட்டத்தை அதிகரித்து விளையாட்டு வீரர்களுக்கு உடனடிச் சக்தித் தேவையைப் பூர்த்திச்செய்கின்றன. ஆயினும் உயர்வான GI பெறுமானம் உடைய உணவுப் பொருள் கள் குடல்வழிப் புற்று நோயினை (Colorectal carcinoma) ஏற்படுத்தும் ஆபத்தான கார ணிகளாகவும் அமைகின்றன.

தற்போது உலகின் பல நாடுகளால் குறிப்பாக கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளால் GI ஆனது ஒரு மருந்து உணவுப் பிரயோகக் குறியீடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப் படையில் மேலைத்தேய உணவுப் பொருள் களின் GI பெறுமானம் அறியப்பட்டு அதன் பிரகாரம் பல நோயாளர்களுக்கு ஏற்ற வகை யில் உணவுக் கட்டுப்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நாமும் எமது உணவுப் பொருட்களின் GI பெறுமானத்தை அறிந்து அவற்றுக்கமைய உணவுப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதன் மூலம் எமது வாழ்வையும் ஆரோக்கியமான வாழ்க் கையாக மாற்றியமைக்க முடியும் என்பது உறுதியானதாகும்.

பிறநாடுகளில் பலவகையான உணவுப் பொருள்களின் கிளைசீமிக் சுட்டியினை ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் பொதுவாக உட்கொள் ளப்படும் உணவுவகைகள் பற்றிய ஆராய்ச் சிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. இன்றைய நிலையில் யாழ்ப்பாண மக்களிடையே நீரிழிவு, இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் பெருகி வருவதால் அவர்களுக்குப் பொருத்தமான உணவு வகைகள் மேலைத் தேய ஆராய்ச்சிகளின் அடிப்படை யிலேயே சிபாரிசு செய்யப்பட்டு வருகின்றன. இங் குள்ள உணவு வகைகள் மேலைத்தேய உணவு வகைகளுக்கு ஒத்தவையாக இருப் பினும் பயிர் வளர்க்கப்படும் சூழல், மண் வளம் என்பவற்றைப் பொறுத்து மாறுபடும். எனவே இங்குள்ள உணவுப் பொருட்கள் சிலவற்றின் கிளைசீமிக் சுட்டிப் பெறுமானம் ஆராய்ச்சியின் போது கண்டறியப்பட்டது.

### இதரை வாழைப்பழமும் பப்பாசிப்பழமும்

கதலி, கப்பல், இதரை என வாழைப் பழங்கள் தாள் கிளைசீமிக் சுட்டியுடைய பழ வகைக ளாகும். இவற்றுள் இதரை வாழைப் பழ மானது குறைந்த கிளைசீமிக் சுட்டியைக் கொண்டது (55). ஏனைய பழங்களில் பப்பா சிப்பழமானது மிகவும் குறைந்த கிளைசீமிக் சுட்டியுடைய பழமாகும். பலாப் பழமானது நடுத் தர கிளைசீமிக் சுட்டியுடைய பழமாகும்.

எனவே இவற்றுள் பப்பாசிப்பழம், இதரை இன வாழைப்பழம் என்பன நீரிழிவு,இருதய நோய் உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

**சில பழவகைகளின் கிறைசீமிக் சுட்டிப் பெறுமானங்கள்**

| பழங்கள் | கிளைசீமிக் சுட்டி(%) |
|---|---|
| கதலி வாழைப்பழம் | 54.45 |
| கப்பல் வாழைப்பழம் | 50.43 |
| இதரை வாழைப்பழம் | 47.47 |
| பலாப்பழம் | 65.36 |
| பப்பாசிப்பழம் | 34.80 |

**புழுங்கல் அரிசியும் பயறும் உகந்தவை**

சமைத்த வெள்ளை அரிசி (30 நிமிடம்), சிவப்பரிசி (30 நிமிடம்), புழுங்கல் அரிசி (40 நிமிடம்), என்பவற்றில் கரையும், கரையாத நார்களின் அளவு ஊரரிசியில் (பகுதியாகச் சமைத்த) அதிக அளவில் இருப்பதனால் கிளைசீமிக் சுட்டிப் பெறுமானம் மிகக் குறை ந்த அளவாகக் காணப்படுகின்றது. அவித்த பயறு (25 நிமிடம்), சிந்தாமணிக்கடலை (40 நிமிடம்) என்பவற்றைக் கருதும் போது இவை இரண்டும் மிக அதிக அளவிலான கரையும், கரையாத நார்கள், புரதம் என்பவற்றைக் கொண்டிருப்பதனால் சமைத்த அரிசியை விடக் குறைவான கிளைசீமிக் சுட்டியைக் கொண்டுள்ளன.

**சில தானிய வகைகளின் கிளைசீமிக் சுட்டிப் பெறுமானங்கள்**

| தானியங்கள் | கிளைசீமிக் சுட்டி (%) |
|---|---|
| 1. வெள்ளை அரிசி (Bg-11-11) | 66.61 |
| 2. சிவப்பு அரிசி (A6-402) | 60.24 |
| 3. புழுங்கல் அரிசி (மொட்டைக்கறுப்பன்) | 55.97 |
| 4. பயறு | 31.43 |
| 5. சிந்தாமணிக் கடலை | 33.27 |

அவித்த மரவள்ளிக் கிழங்கானது மிக உயர்வான கிறைசீமிக் சுட்டி உடைய உண வாகும்.

எனவே நீரிழிவு நோயாளர்கள் இதனை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும். அவித்த உருளைக்கிழங் கினைச் சூடாக உட்கொள்வதிலும் பார்க்க அவற்றை ஆறவிட்டு உண்பது சிறந்த தாகும்.

ஏனெனில் ஆறவைத்த உருளைக் கிழங்குகளில் சமிபாடடைய முடியாத மாப்பொருள் உருவாகுவதால் கிளைசீமிக சுட்டிப் பெறுமானம் குறைவடைகிறது.


**சில கிழங்கு வகைகளில் கிளைசீமிக் சுட்டிப் பெறுமானங்கள்.**

| கிழங்கு வகைகள் | கிளைசீமிக் சுட்டி (%) |
|---|---|
| 1. உருளைக் கிழங்கு (30 நிமிடம் அவித்து) | 65.16 |
| 2. மரவள்ளிக் கிழங்கு (40 நிமிடம் அவித்து) | 78.67 |

(தொடரும்)

# ஆட்சி மாற்றம் உருவாவதை எவராலும் தவிர்க்க முடியாது

## ரணில் தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கத்தை தோற்கடித்து புதிய அரசாங்கமொன்று உருவாவதனை எவராலும் தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் பொருட்கள், சேவைகளுக் கான விலை பல தடவைகள் அதிகரித்துள்ளதாகவும் சம்ப ளங்கள் அதிகரிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போரின் பின்னர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவ தாகத்தெரிவித்த அரசாங்கம் இதுவரையில் மக்களுக்கு நன்மைகளை வழங்கத் தவறியுள்ளதாகவும் போர் முடிவடைந்து பல மாதங்கள் கடந்துள்ள நிலையில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு அதற்கான நன்மைகள் வழங்கப்பட வேண்டும்மென்றும் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 10ஆயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாத்தறையில் நடைபெற்ற கிராம வலம் நிகழ்வில் கலந்து கொண்ட போது ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகள் நிலவும் சகல துறைகளையும் அரசாங்கம் அடக்கு முறைக்கு உட்படுத்த முயற்சித்து வருவதாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம்

## மங்கள சமரவீர எம்.பி. அறிவிப்பு



(கொழும்பு)

சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள் ளார்.

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிர்ப்பு வெளி யிடும் வகையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று கொழும்பில் நடத்தப்படவுள்ளதாகவும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள உள்ளதா கவும் அவர் தெரிவித்துள் ளார்.

மாத்தறை உயன்வத்த விளையாட்டரங் கில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற் றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பலவற்றின் ஆதரவு இந்தப் போராட் டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)



யா/ புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய நவராத்திரி விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தி னராகக் கலந்துகொண்ட க.ஆனந்தராசா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வட பிராந்தியத்தில் தொல்பொருள் ஆய்வு

(கொழும்பு)

கடந்த 120 வருடங்களுக்கு பின்னர் வடபிராந்தியத்தில் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்மூலம் பல புராதன இடங்கள் இனங் காணப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் தெிவித் துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, கிளி நொச்சி மாவட்டங்களில் இந்து மற்றும் பௌத்த புராதன ஆலயங்களின் தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை



கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

***தந்தை வழி ஒத்துழைப்பு! தன் சொத்து விஸ்தரிப்பு!***

**கவர்ச்சியான பேச்சையும், காரசாரமான பேச்சையும் கலந்து பேசும் கடக ராசி நேயர்களே!**

மற்றவர்களுக்கு யோசனைகள் சொல்வதில் வல்லவர்களாகி, மலைபோல அவர்களை உயரவைக்கும் உங்களுக்கு இப்போது வந்திருக்கும் குருப்பெயர்ச்சி வாழ்க்கையில் வசந்த காலத்தை வரவழைத்துக் கொடுக்கப்போகிறது.

மற்றவர்களுக்கோ வாழ்க்கையில்தான் பிரச்சினை வரும். ஆனால், உங்களுக்கோ வாழ்க்கையே பிரச்சினையாக இருக்கும். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்த பொழுது, நீங்கள் அளவற்ற பிரச்சினைகளை சந்தித்து வந்தபோது, துன்பத்தை விலக்குவது எப்பொழுது என்று சிந்தித்து கொண்டிருந்த உங்களுக்கு, இந்த குருப்பெயர்ச்சி இன்பங்களை எல்லாம் வரவழைத்துக் கொடுக்கும் விதத்தில் அமையப்போகிறது.

உங்கள் ராசிநாதன் சந்திரன் பலம் பெறும் பௌர்ணமி நாளில் அல்லவா குருப்பெயர்ச்சியாகிறது. அதுமட்டுமல்ல, மீனத்தில் சஞ்சரிக்கும் குரு ஐந்தாம் பார்வையாக உங்கள் இராசியை பார்க்கிறது.

எனவே, ஐந்தாம் பார்வையாக உங்கள் இராசியையும், ஒன் பதாம் பார்வையாக விருச்சிக இராசியையும், தற்சமயம் பெயர்ச்சியாகப்போகும் குரு பார்க்கப்போவதால், அளவுக்கு அதிகமான நற்பலன்களைப் பெறும் அந்த இரண்டு இராசிக ளில் ஒன்றாக உங்கள் இராசியும் அமைவதால், இனி நீங்கள் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றிகாணப்போகிறீர்கள்.

இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நல்ல நேரம் ஆரம்பமாகப் போகிறது. குழம்பிய குழப்பங்கள் நீங்கும். கூட இருப்பவர்களால் நன்மைகள் ஏற்படும்.

வளம் பெற நீங்கள் மேலும் வழிபாட்டை முறையாக மேற்கொண்டால், நிலங்களில் வசிக்கும் மனிதர்களின் நெஞ்சங்களில் எல்லாம் உங்கள் நினைவுதான் இருக்கும்.

சுய ஜாதகத்தில் குரு இருக்குமிடம், பார்க்குமிடங்களை ஆராய்ந்து, அது தரும் யோகம் செயல்பட சிறப்பு ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து, அனுகூல நட்சத்திரம் அமைந்த நாளில் வழிபாடு செய்து வாருங்கள்.

யோகம் தரும் எண்களின் ஆதிக்கத்தில் உங்கள் பெய ரையும், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயர்களையும் அமைத்துக் கொண்டு பணியைத் தொடருங்கள்.

குரு உங்கள் இராசியைப் பார்க்கிறது. எனவே உங்கள் இராசி முழுமையாக புனிதமடைந்து விடுகிறது. ஆரோக்கியம் சீராகி ஆர்வத்தொடு பணிபுரியப்போகிறீர்கள். சீரும் ,சிறப்பும் , செல்வாக்கும் வீடுதேடி வந்து சேரப்போகிறது. நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றப் போகின்றன.

ஜென்ம ராசியோடு, மூன்று, ஐந்து (1, 3, 5) ஆகிய இடங்களையும் குரு பார்க்கப் போகிறார். குருவின் 5, 7 ,9 ஆம் ஆகிய பார்வை பதியும் இடங்களாக அவை அமைவதால் அந்த இடத்திற்குரிய ஆதிபத்ய பலன்கள் எல்லாம் அற்புதமாக நடைபெறப்போகிறது.

சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு வெற்றிகள் ஸ்தானத்தையும், பஞ்சம பாக்ய ஸ்தானத்தையும் பார்ப்பதால் ,திட்டமிட்ட காரியங்கள் திசைமாறி செல்லாமல் அவை திட்டமிட்ட படியே நடைபெறப் போகிறது.

**நீங்கள் பிடிவாத குணத்திற்கு சொந்தக்காரர்கள்!**

நீங்கள் வீட்டை மட்டும் கவனிப்பவர்களுக்கு மத்தியில் நாட்டையும் கவனிப்பவர்கள். பொதுநல பிரியராகவும், அதன் மூலம் புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்பவர்களாகவும் விளங்குவீர்கள்.

உங்களின் அதிமதுர பேச்சால் அரை நொடியில் மனம் மாறி விடும். நீங்கள் ஆன்மீகம் முதல் அரசியல் வரை அத்துபடியாக வைத்திருக்கும் உங்களுக்கு பிரச்சினைகள் வந்தால் மட்டுமே வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

நீங்கள் வதந்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் தான் வசதிகளை உங்களால் பெருக்கிக் கொள்ள முடிகிறது. மற்றவர்களுக்கு வராத யோசனைகள் உங்களுக்கு வந்து சேரும்.

எப்படியெல்லாம் எதிரிகளை உதிரியாக்கலாம் என்று சிந்திப்பீர்கள். பேசும் கலையை பெரிதும் கற்று வைத்திருப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்களும் நீங்கள்தான்.

கடிவாளமில்லாத குதிரையைப் போல, துள்ளி திரியும் உங்களுக்கு பிடிவாத குணம் மட்டும் இல்லாவிட்டால், பிறரை அனுசரித்து செல்கின்ற ஆற்றலையும் வரவழைத்துக் கொண்டால், முன்னேற்றங்கள் வாழ்வின் முதல் பகுதியிலேயே உங்களுக்கு வந்து சேரும்.

திருத்தம் நிறைந்த பெண்ணாக இருந்தாலும், பொருத்தம் பார்த்து செய்தால் தான் வாழ்க்கையில் வருத்தமில்லாத நிலை ஏற்படும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியால் வரும் பலன்களைப் பற்றி பார்ப்போம்.

*ஒன்பதில் குருவும் வந்தால்*
*ஒப்பற்ற வாழ்க்கை சேரும்!*
*பொன்பொருள் அதிகரிக்கும்!*
*பூமியால் இலாபம் கிட்டும்!*
*நண்பர்கள் ஒத்துழைப்பால்*
*நலம்யாவும் வந்து கூடும்!*
*இன்பத்தின் எல்லை காண*
*'இறையருள்' கைகொடுக்கும்!*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு ஜீவன ஸ்தானத்திற்கும் அதிபதியாவதால் உத்தியோகம் தொழிலில் நீங்கள் எடுத்த முடிவு வெற்றி பெறும். விருப்ப ஓய்வில் வந்து கூட விரும்பிய தொழிலை தொடங்க ஒரு சிலர் முன்வருவர். நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கப் போகிறது.

எனவே வாழ்க்கைப் பயணம் தொடரும் போது வழியெல்லாம் நல்ல தகவல் வந்து கொண்டே இருக்கும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

இதுவரை எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கப் போவதால் பிறர் மதிக்கும் படியான வாழ்க்கையை அவர் அமைத்துக் கொடுப்பார். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் நீங்கும்.

எதை தொட்டாலும் தடைகளும் தாமதங்களும் வந்து கொண்டிருக் கின்றனவே என்று நினைத்த நீங்கள் இனி தொட்டதெல்லாம் வெற்றி பெறப்போகிறது. ரண சிகிச்சை மூலம் குணமாக வேண்டிய நோய்கள் கூட இனி சாதாரண சிகிச்சை மூலமே குணமாகி விடும். கடன்சுமை குறை ந்து கவலைகள் ஓயும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானமான மூன்றாமிடத்தில் பதிவதால் உடன் பிறப்புகள் உற்சாகத்தோடு வந்திணைந்து உதவிக்கரம் நீட்டுவர்.

சகோதர பகை மாறி சந்தோஷம் அதிகரிக்கும். ***அண்ணன் என்னடா தம்பி என்னடா... அவசரமான உலகத்திலே*** என்று சொல்லிய நீங்கள் இனி அவசரத் திற்கு கைகொடுத்து உதவுபவர்கள் அண் ணன் தம்பிகள் தான் என்று சொல்லப் போகிறீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

சகோதர ஸ்தானம் புனிதமடைவதால் முன்னோர்களுடைய சொத்து பாகப்பிரி வினையில் நீண்ட நாட்களாக ஒரு சகோதரம் ஒத்து வந்தால் மற்றொரு சகோதரம் ஒத்து வரவில்லையே? எப்படி பிரித்துக் கொள்வது என்று கவலைப்பட்ட நிலை இனி மாறும். உடன் பிறப்புகள் ஒத்து வருவர்.

உங்கள் வீட்டிற்கு வந்த சொத்துக்களை சுமுகமாக பிரித்துக் கொள்வோம். சுபகாரியங்கள் எங்கள் வீட்டில் நடைபெற வேண்டுமென்று சொல்லப் போகி றார்கள். நீங்களும் அவர்களின் இல்ல திருமண விழாக்களை சீரும் சிறப்புமாக நடத்தி வைக்கப் போகிறீர்கள்.

பொதுவாக தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றி பெற வைக்கும் குருவின் முழுப்பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் வங்கிச் சேமிப்பு வளரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். தொழிலில் இடையூறு செய்த கூட்டாளிகளுக்குப் பதிலாக புதிய பங்குதாரர்களை சேர்க்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

பால்ய நண்பர்கள் கூட உங்களுக்கு பங்குதாரர்களாக முன்வருவர். மாமன் , மைத்துனர் வழியிலும் உங்களுக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பு கிடைக்கும்.

சேமிப்பையும் செல்வாக்கையும் உயர்த்த நினைகும் குரு உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அனைத்திற்கும் தீர்வு காண வைக்கும்.

அப்படிப்பட்ட குருவை நீங்கள் கொண்டாடி மகிழ வேண்டுமல் லவா? எனவே நட்சத்திரம் அனுகூலம் தரும் நாளில் திருச்சொந்தூருக்குச் சென்று தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமை த்துக் கொடுக்க வழி

**சிவல்புரி சிங்காரம்**

பட்டு வாருங்கள். "குரு பீடம்" என்று கருதப்படும் செந்தூருக்குச் சென்று வழிபட்டு வந்தால் குருவருளோடு திருவருளும் உங்களுக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை பலத்தால் ''புத்திர ஸ்தானம்'' புனிதமடைவதால் பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும்.

அவர்களால் உதிரி வருமானங்க ளும் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணம் , கல்வி , கடல்தாண்டும் முயற்சி , பூப்பனித நீராட்டு விழா ஆகியவற்றை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

ஒன்பதாமிடத்து குருவால் ஒளிமயமான வாழ்க்கை அமைய சொர்ணவல்லி அம்மனையும் வழிபட்டு சொகுசான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**கடக இராசிப் பெண்களுக்கு கடன் சுமை குறையும்!**

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப் பெயர்ச்சியால் உடல் நலம் சீராகும். உறவினர் பகை அகலும். தாய்வழி தனலாபம் கிடைக்கும்.

கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மாறும். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும் பிள்ளைகள் வழியில் இருந்த கோபம் மாறி பாசம் கூடும்.

அவர்கள் வேலையில் சேர கண்ட கனவு பலித்து வரு மானத்தை உங்கள் கரங்களில் கொண்டு வந்து சேர்ப்பர். வியாழன் தோறும் விரதமிருப்பது நல்லது. ராகு வழிபாடு யோகம் சேர்க்கும்.

(தொடரும்)



யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆசிரிய முன்சேவைப் பயிற்சியை முடித்த ஆசிரிய உதவியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ஜி.இரட்ணசிங்கம் உரையாற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் ஆகியோர் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.(படங்கள்:என்-





யா/ முருகவேள் வித்தியாலயத்தின் ESDFP திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பூஜை வழிபாட்டில் ஈடுபடுவதையும் தீவகக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) அ.ஸ்ரெனிஸ்லாஸ் அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

# கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக கடந்த 13 ஆம்திகதி யாழ்.சுகாதார சேவைகள் பணி மனையில் கலந்துரையாடப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் கோப்பாய் பிரதேச அமைப் பாளர் ஆர்.ஐங்கரன் தலைமை யில் இடம்பெற்ற இக்கலந்துரை யாடலில் கோப்பாய் அரசினர் வைத் தியசாலை அபிவிருத்திக் குழுவி னரும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனும் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர்,

மேற்படி வைத்தியசாலைக்கு தளபாடங்கள் பெற்றுத் தருவதாக வும் கழிவுவாய்க்கால் புனரமைத் தல், மலசலகூடக்குழி சுத்திகரித் தல், வைத்தியசாலையைச்சுற்றி மின்குமிழ் பொருத்துதல் போன்ற தேவைகளை நிறைவேற்றிக் தருவ தாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்தையும் வைத் தியசாலை உள் வீதியையும் அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் நிறை வேற்றித் தருவதாகத் தெரிவித் தார். (ஸ்ரீ)

# பரு.சாரதா சேவாச்சிரமத்தினால் பல்வேறு சேவைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவிலுள்ள Scot ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாராதா சேவாச்சிரமம் பல்வேறு சேவைத் திட்டங்களை முன்னெடுத் துள்ளது.

இதற்கமைய உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலிலுள்ள அருட் சகோதரிகள் மற்றும் மாணவிகள் வசிக்கும் இல்லம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

மேற்படி இல்லத்திற்கு மின்சார இணைப்பு, நீரிறைக்கும் இயந்தி ரம், சி.டி.எம்.ஏ. தொலைபேசி, தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட் டுள்ளன.

அத்துடன் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்துக்கு ரூ.10 ஆயிரம் பெறுமதியான சிறிய ஜெனரேட்டரும் வழங்கப்பட்டுள்ளதாக சுவாமி சித்ரூ பானந்தா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# சிறைச்சாலை தாக்குதல் சம்பவத்தால் பொன்சேகாவுக்கு ஆபத்தில்லை

## சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினால் முன் னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆபத்தில்லை என சிறைச்சாலைகள் ஆணை யாளர் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித் துள்ளார்.

சரத்பொன்சேகாவின் பாதுகாப் புக்கு எந்தவகையிலும் அச்சுறுத் தல் ஏற்படவில்லை எனவும் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திற் கும் சரத்பொன்சேகா தடுத்து வைக் கப்பட்டுள்ள பிரதேசத்திற்கும் இடை யில் இடைவெளி காணப்படுவ தாக அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (ஸ்ரீ-2)

# அக்கராயன் குளம் புனரமைக்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

யுத்தத்தினால் சேதமடைந்த அக்கராயன் குளம் புனரமைக்கப் படவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வர்களின் தரத்தை முன்னேற் றுதல் மற்றும் வலுப் படுத்துதல் ஆகிய கருத்திட்டத்தின் கீழ் இக் குளம் புனரமைப்பு செய்யப்பட வுள்ளது.

5 கோடி ரூபா செலவில் புனர மைக்கப்பட வுள்ள இக்குளமானது ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்க ளுக்கு தேவையான நீரைத் தேக்கி வைத்து உரிய நேரத்தில் வயல் களுக்கு நீர் பாய்ச்சக் கூடிய ஒரு பெரியகுளம் என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-10)


2010.11 **09**

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1793 - கிறிஸ்தவ மதகுரு வில்லியம் கேரி கல்கத்தா வந்து சேர்ந்தார்.
- 1799 - பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. நெப்போலியன் பொனபார்ட் பிரான்சைத் தனது கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்தான்.
- 1872 - மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ் டன் நகரில் களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ பரவியதில் பொஸ்டனின் பெரும் பகுதி அழிந் தது. 776 கட்டடங்கள் அழிந்து 20 பேர் கொல்லப்பட்டனர்.
- 1887 - ஐக்கிய அமெரிக்கா ஹவாயின் பேர்ள் துறைமுகத்தின் உரிமையைப் பெற்றது.
- 1888 - கிழிப்பர் ஜேக் மேரி ஜேன் கெலி யைக் கொன்றான். இதுவே அவனது கடைசிக் கொலையாகும்.
- 1913 - மகாத்மா காந்தி கைதுசெய்யப்பட்டு 9 மாதச் சிறைத் தண்டனையை அனுப வித்தார்.
- 1921 -அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஒளிமின் விளைவை விளக்கியமைக்காக இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1937 - ஜப்பானியப் படைகள் சீனாவின் ஷங்காய் நகரைக் கைப்பற்றினர்.
- 1953 - கம்போடியா, பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1963 - ஜப்பானில் மீக் என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில இடம்பெற்ற விபத்தில் 458 பேர் கொல்லப்பட் டனர்.
- 1963 - ஜப்பான் யோகோஹாமா என்ற இடத்தில் மூன்று தொடரூந்துகள் மோதியதில் 160 பேர் கொல்லப்பட் டனர்.
- 1967 - நாசா நிறுவனம் கேப் கென்னடி தளத்தில் இருந்து ஆளில்லா அப்பல்லோ 4 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது.
- 1985 - சதுரங்க உலகக்கிண்ணப் போட் டியில் காரி கஸ்பரோவ் அனத் தோலி கார்ப்பொவைத் தோற்க டித்து உலகின் முதலாவது வயது குறைந்த சதுரங்க வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1990 - நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைப்பு அறிமுகப்படுத் தப்பட்டது.
- 1994 - டார்ம்ஸ்டாட்டியம் என்ற கனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 2000 - உத்தராஞ்சல் மாநிலம், இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.
- 2005 - வீனஸ் எக்ஸ்பிரஸ் என்ற ஐரோப் பாவின் விண்கலம் கசகஸ்தானில் இருந்து ஏவப்பட்டது.
- 2005 - ஜோர்தானின் அம்மான் நகரில் மூன்று விடுதிகளில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் களில் 56 பேர் கொல்லப்பட் டனர்.

## இறப்புகள்

- 1918 - கியோம் அப்போலினேர், பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1880)
- 1970 - சார்லஸ் டி கோல், பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி (பி. 1890)
- 2005 - கே.ஆர்.நாராயணன், இந்தியக் குடியரசுத் தலைவர் (பி. 1921)
- 2006 - வல்லிக்கண்ணன், தமிழ் எழுத்தாளர் (பி. 1920)



1989 - பனிப்போர்: கம்யூனிசக் கிழக்கு ஜெர்மனி பேர்லின் சுவரைத் திறந்து விட்டதில் பலர் மேற்கு ஜெர்மனிக்குள் செல்ல ஆரம்பித்தனர்.

# கிராமங்களை நோக்கிய ஆங்கில மொழிக் கல்வி

02

**கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வ.பரந்தாமன் ஆற்றிய நினைவுப் பேருரை இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)**

நிறுவனங்களிற்கு வெளியே ஆங்கில மொழியை சமூகத்தில் தேடுவதற்கான அல்லது அதனுடன் ஒன்றிணைவதற்கான சந்தர்ப்பங்கள் மிகச் சொற்பமாக அல்லது இல்லை என்ற நிலைக்கு உள்ளதாகவே காணப்படுகின்றது.

மாணவர்கள் இம் மொழியைக் கற்பதற்கான சரியான நோக்கத்தை, தேவையை தற்பொழுது புரியத் தொடங்கியுள்ளனர். கல்லூரி வாழ்க்கையின் பின் ஓர் மாணவன் தன்னை, தனது குடும்பத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் தன்னை ஈடுபடுத்துவதற் கான சந்தர்ப்பத்தையே முக்கிய நோக்க மாகக் கருதுகின்றான்.

இத்தகைய ஆர்வம் தற்பொழுது கிராமத்துப் பாடசாலைகளில் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களிடம் அதீதமாக்க் காணப்படுகின்றது. இங்கிலாந்து, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளில் தமது மேற் படிப்புக்களைத் தொடர்வதற்கு பெருந்தொகையான மாணவர்கள் தமது ஆங்கில மொழித் தேர்ச்சியை ஆதாரமாகக் கொள்கின்றார்கள்.தமது அடைவு மட்டத்தில் தாமே குறைக்களைக் கண்டுகொள்வதிலும், எந்த மாதிரியான அடைவு மட்டத்தை ஆங்கில மொழியில் தாம் எட்டவேண்டும் என்பதிலும் மாணவர்கள் மிகத் தெளிவாக உள்ளார்கள்.IELTS,TOEFL போன்ற பரீட்சைகளின் நோக்கம், அதன் பரீட்சைக் கூறுகள், எதிர்பார்ப்புகள் பற்றிய பல விடயங்களை தற்பொழுது கிராமப்புற மாணவர்களும் பேசத் தொடங்கியுள்ளார்கள். ஆனால் அவர்களால் அப்பரீட்சைகளை அணுக முடியாமல் உள்ளதும், தமது குறைந்த அடைவுமட்ட நிலையில் உள்ள ஆங்கில மொழித் தேர்ச்சியின் நிலைப்பாடும் அவர்களை ஓர் விரக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றது. பொதுவாக, மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதற்கு இரு வகையான ஆங்கில மொழிப் புலமை அல்லது தேர்ச்சியை எட்ட வேண்டியுள்ளது.

1. BICS - Basic Interpersonal Communication skills)

பொதுவான தொடர்பாடலுக்கான ஆங்கிலம்

2. CALP - (Cognitive Academic Language Proficiency)

(கல்விப்புல விருத்தியை மேம்பாடு செய்வதற்கான ஆங்கிலம்)

சர்வதேச மட்ட ஆங்கில மொழித் தேர்ச்சியை மதிப்பீடு செய்யும் பரீட்சைகள் மேற் குறிப் பிட்டு இரண்டு தேர்ச்சி மட்டங்களையும் திறன்களையும் மாணவர்கள் மத்தியில் எதிர்பார்க்கின்றன.


**ஆங்கிலமொழிப் போதனை**

நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆங்கிலமொழிப் போதனையானது பாடசாலைகளில் ஓர் முக்கிய, விமர்சனத்திற்கு உள்ளாகுகின்ற கல்வி நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக வகுப்பு மூன்று தொடக்கம் கற்பிக்க ஆரம்பிக்கின்றோம். பல்வேறுபட்ட கற்றலிற்கான நூல்கள், ஆசிரியர் வழிகாட்டல் நூல்கள், கருத்தரங்குகள், பாட ஆய்த்த ஆவணங்கள், பரீட்சைகள் என குறிப்பிட்ட செயற்திட்டங்களையும் தேர்வு மட்டங்களையும் உள்ளடக்கியதாகவே பாட சாலைகளில் ஆங்கில மொழிப் போதனை நடாத்தப்படுகின்றது அல்லது செலுத்தப்படு கின்றது. கிராமப்புற மாணவர்களது ஆங்கில மொழித் தேர்ச்சி யானது இவ் வகையான நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விப் போதனையிலேயே தங்கியுள்ளது. இவ் வகையான மாணவர்கள் நிறுவனத்திற்கு வெளியில் ஆங்கில மொழியினூடான அனுபவத்தை பெறுவது என்பது நிச்சயமற்ற தன்மை யாகவே கருதப்படுகின்றது.

கிராமப்புறப் பாடசாலைகளில் உள்ள ஆங்கில மொழியைப் போதிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாகக் கூறின் 1990களிற்குப் பின், ஆங்கில ஆசிரியர்களை புதிதாக இணைத்துக் கொள்ளப்படுகின்ற அல்லது நியமிக்கின்ற வேகம் மிக மந்த கதியில் காணப்படுவதும், நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்களிற்கு வழங்கப்படுகின்ற தொழில் ரீதியான பயிற்சியின் தராதரம் பற்றிய தன்மையும், பல்வேறு மட்டங்களில் ஆங்கிலமொழிப் போதனை யை விமர்சிப்பதற்கு வித்திடுகின்றன. கல்வியியல் கல்லூரிகளினூடு தொழில் தகைமையைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்கள் பெரும்பாலும் தேசியப் பாடசாலைகளிலும், நகர்ப்புறப் பாடசாலைகளிலும் தமது நியமனங்களை தக்க வைத்துக் கொள்கின்றனர்.

கல்வி திணைக்களங்களால் நடாத்தப்படுகின்ற ஆங்கிலமொழித்தினமும் போட்டிகளும் பெரும்பாலும் நகர்ப்புற அல்லது தேசியப் பாடசலாகைளினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றன.

கிராமப்புற மாணவர்கள் இவ்வகையான நிகழ்வுகளை "எட்டாப்பழம் புளிக்கும்" என்ற நிலையில் விட்டுவிடுகின்றார்கள். இத்தகைய நடைமுறைச் சிக்கல்கள், கிராமத்துப் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் ஆங்கில மொழி பற்றியும் அதைப் போ திப்பதிலும் கற்பதிலும் ஏற் படும் சிக்கல் பற்றியும் ஓர் வகையான தொய்வு நிலையை ஏற் படுத்துகின் றது. இந்த நிலை மாற வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும்.



எமது பிராந்தியத்தில் உள்ள கிராமப்புறப் பாடசாலைகளை மையமாக வைத்து ஆங்கில மொழிக் கல்வியைப் போதிப்பதற்கான புதிய சிந்தனை வடிவம் கல்வியியலாளர்களிடமிருந்து தோன்ற வேண்டும்.

கல்விக்கான திட்டமிடல் நடவடிக் கைகள் பிராந்திய மாகாண மட்டங்களிற்கு தாராளமாக பகிர்ந்தளிக்கப்படும் பொழுது, மேற் குறிப்பிட்ட சிந்தனை வடிவங்களுக்கு நாம் உத்வேகம் அளிக்கலாம்.

**திரு.வ.பரந்தாமன்**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனா நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

**கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில மொழிப் போதனையை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள்**

1.யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சகல தனியார், அரச பாடசாலைகளை சேர்ந்த ஆங்கில மொழி போதிக்கும் ஆசிரியர்கள் அங்கம் வகிக்கும் Jaffna English Language Teachers Association (JELTA) என்ற ஓர் பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இவ்JELTA ஆனது அதன் கட்டமைப்பில் SLELTA (Srilanka English Language Teachers' Association), வை ஒத்ததாக அமையும். (தொடரும்)

## அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட கடனட்டை அறிமுகம்

(கொழும்பு)

அரச சேவையாளர்களுக்கு விசேட கடனட்டை ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சின் பங்களிப்புடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கில் இந்த அரசசேவையாளர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நத்தார் பண்டிகைக்கு முன்பதாக இந்தக் கடனட்டைகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் 52 நாட்கள் வட்டியில்லாத வகையில் கொள்வனவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் சலுகைகளை வழங்கவுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்ள வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)




கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா "ஸ்ரீமத் பகவத்கீதை" பற்றிய கருத்தரங்கு நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

## ஐ.தே.க.வின் அரசியல் யாப்பு திருத்தம் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் யாப்பு திருத்த சட்டமூலம் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் சட்டக்குழுவினரால் தயாரிக்கப்பட்ட அரசியல் திருத்தத்தின் இறுதி அறிக்கையே இவ்வாறு சமர்ப்பிக்கப்படவுள்ளது. மத்திய செயற் குழுவின் அனுமதி கிடைத்த பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மாநாட்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வருடாந்த மாநாடானது அடுத்த மாதம் 3 ஆவது வாரத்தில் இடம்பெறவுள்ளதாக கட்சியின் உள்ளக உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதவிர கட்சியின் ஒழுங்குகளை சீர்குலைத்தமை தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான இறுதி அறிக்கைகளும் எதிர்வரும் மத்திய செயற்குழு அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

## பதவிப்பிரமாண நிகழ்வு குறித்த விளம்பரங்களில்

## ஜனாதிபதியின் படத்துக்கு மட்டுமே அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வுகள் தொடர்பான விளம்பரங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் படம் மட்டுமே காட்சிப்படுத்தப்படவேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

பதவிப் பிரமாண நிகழ்வு தொடர்பான விளம்பரங்கள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றில் வேறு நபர்களின் பெயர்களோ, புகைப்படங்களோ உள்ளடக்கப்படக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொகுதி அமைப்பாளர்களிடையே அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.நாடு முழுவதிலும் இந்த விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

பதவிப்பிரமாணநிகழ்வு ஓர்தேசிய வைபவம் எனவும் ஒரு கட்சிக்கோ தனி நபருக்கோ இதனை உரிமை கோரமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிப்பிரமாண நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 22 ஆம் திகதி வரையில் நடைபெறும் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அமைச்சர் ஹெகலியவின் கருத்து

# தமிழ் இன அழிப்பை நியாயப்படுத்துகிறது!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன விகிதாசாரத்தினை மாற்றியமைத்து தமிழ்த் தேசத்தை திட்டமிட்டு அழிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நியாயப்படுத்தும் வகையில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கடந்த வியாழக்கிழமை (4.11.2010) அன்று தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மகாநாட்டில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில், "கிழக்கில் இன விகிதாசாரத்தினை மாற்றும் வகையிலான அரச ஆதரவுடனான குடியேற்றங்கள் ஆபத்தானவை" எனத் தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் *"... கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்கு காணி இருக்கின்றதோ அங்குதான் காணிவழங்க முடியும்.*

*ஒரு பிரதேசத்தை ஒரு இனம் சொந்தம் கொண்டாடமுடியாது. அதேபோல ஒருபிரதேசத்தை ஒரு. இனத்துக்கு வழங்கிவிடவும் முடியாது.*

*நாடு இப்போது விடுவிக்கப்பட்டுள்ளது. எவரும் எங்கு வேண்டுமானாலும் வாழலாம்.*

*மேல்கொத்மலை நீர்த்தேக்கம் அமைக்கப்படும் போது இன விகிதாசாரம் மாற்றியமைக்கப்பட்டு விடும் என்ற பிரச்சினை எழுந்தது. பெருந்தோட்ட மக்களின் இன விகிதாசாரம் குறைந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மின்திட்டத்தை செயற்படுத்தும் போது இன விகிதாசாரம் பற்றி சிந்திக்கமுடியாது. இதே அடிப்படையில் கிழக்கில் டி.எஸ். சேனநாயக்க நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து மக்களை குடியேற்றினார். எவரும் எங்கும் வாழலாம். இதுவே அரசின் கொள்கை..."*

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளதாக 05.11.2010 திகதிய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

அமைச்சரின் இக்கூற்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமித்தேசிய இனம் வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத் தீவில் தனக்கெனத் தனியானதோர் தாயகத்தையும் அதில் இறைமையையும் ஆட்சி உரிமையையும் தன்வசம் கொண்டிருந்தது. இந்நிலையில் 1505இல் போர்த்துக்கேயராலும், 1658இல் ஒல்லாந்தராலும், 1796 இல் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ்த்தேசம் தனது இறைமையையும் ஆட்சியதிகாரத்தினையும் பிரயோகிக்க முடியாதவாறு நசுக்கப்பட்டது.

எனினும் இலங்கைத் தீவில் வட-கிழக்கு பிராந்தியத்தில் காணப்பட்ட தமிழ் இராச்சியங்களையும் தெற்கில் காணப்பட்ட சிங்கள இராச்சியங்களையும் ஆக்கிரமித்த போர்த்துக்கேயர் 1505-1658 வரையான 153 ஆண்டுகளும் தொடர்ந்து ஒல்லாந்தர் 1658 -1796 வரையான 138 ஆண்டுகளும் பின்னர் ஆங்கிலோயர் 1796-1833 வரையான 37 ஆண்டுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தாமல் தனித்தனியாகவே ஆட்சிசெய்தனர்.

எனினும் 1833 இல் ஆங்கிலேயர்களால் முழு இலங்கைத் தீவும் ஒரே அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டு தமிழ்த் தேசத்தின் அங்கீகாரமின்றி ஆங்கிலேய மேலாதிக்கத்தால் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப் பட்டது.

இவ்வாறு நிர்வாக வசதி கருதி தமிழ் இராச்சியத்தினையும் சிங்கள இராச்சியத்தினையும் ஒன்றுபடுத்திய ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறும் போது தமிழ்த் தேசத்தின் இறைமையை தமிழர்கள் பிரயோகிக்க முடியாதவாறு சிங்களவர்களிடம் ஆட்சியதிகாரத்தை கையளித்துச் சென்றுவிட்டனர். இதனால் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியில் இருந்து சிங்கள தேசத்தின் தயவில் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதி தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

தமிழ்த்தேசம் தனது இறைமையை பிரயோகிக்க முடியாதவாறு சிங்கள தேசத்தின் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், தமிழ்த் தேசம் தனது இறைமையை பிரயோகிப்பதற்கான அங்கீகாரம் அரசியல் ரீதியாக தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வந்தது. அவ்வாறு இறைமையை பிரயோகிக்க முடியாதவாறு அடக்கி வைத்தால் மட்டும் போதாது, நடைமுறையில் தமிழ்த்தேசம் என்பது வடகிழக்கில் தனக்கென ஓர் தாயகத்தைக் கொண்டு, தனித்துவமான மொழி பண்பாட்டு அடையாளங்களோடு இருக்கக் கூடாதெனக் கருதியது. அவ்வாறு இருப்பது ஒரு இனம் (சிங்களவர்), ஒரு மொழி(சிங்களம்), ஒரு மதம்(பௌத்தம்), ஒரு அரசு (சிங்கள) இவற்றை மட்டும் உள்ளடக்கிய சிங்கள தேசம் என்ற பௌத்த சிங்களக் கோட்பாட்டின் இருப்பிற்கான அச்சுறுத்தலாகவே நோக்கியது.

இந்த அச்சம் காரணமாக ஆங்கிலேயர்களது தயவினால் கைப்பற்றிக் கொண்ட ஆட்சியதிகாரத்தினைப் பயன்படுத்தி தமிழ்த்தேசியத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் திட்டங்களை திட்டமிட்டு அரங்கேற்றத் தொடங்கியது.

சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், நிலப் பறிப்பு, குடியுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு,மொழியுரிமைப் பறிப்பு மற்றும் கல்வி, தொழில், பண்பாடு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட இன ரீதியான பாரபட்ச நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பற்ற தமிழ்மக்கள் மீது 1956,1958 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட அரச வன்முறைகள் ஏவிவிடப்பட்டன.

இவ்வாறான வழிகளில் தமிழ் இனத்தின் தனித்துவத்திற்கும் வாழ்விற்கும் தமிழ்த்தேசத்தின் இருப்பிற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த அழிப்பை தடுப்பதற்காக 1957 ஆம் ஆண்டில் இருந்து காலத்திற்குக் காலம் தமிழ்த் தலைவர்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுடன் செய்து கொண்ட அனைத்து அரசியல் ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டதுடன், அகிம்சை வழிப் போராட்டங்களும் சிங்கள அரசுகளினால் ஆயுத முனையில் அடக்கப்பட்டன.

தமிழ்த் தேசத்தின் இருப்பை அழிக்கும் வகையில் பல வேலைத் திட்டங்கள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசு மேற்கொள்ளும் இந்த இன அழிப்பு நடவடிக்கையை முற்று முழுதாக நியாயப்படுத்தும் வகையில் அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது.

"இலங்கைத் தீவின் அனைத்துப் பிரதேசங்களும் அனைவருக்கும் சொந்தம்' என்று கூறுவதன் மூலம் அரசு பெருந் தன்மையாக நடந்து கொள்வதாகவே வெளியில் இருந்து மேலெழுந்த வாரியாக அவதானிப்பவர்களுக்குத் தென்படும்.

இலங்கை என்ற ஒரு நாட்டிற்குள் இரண்டு தேசங்கள் என்ற யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்படும் போது தனித்துவமான இறைமை கொண்ட தமிழ்த் தேசத்தின் தமிழ்பேசும் மக்களும், சிங்கள தேசத்து மக்களும் சமனான அந்தஸ்துடையவர்களாகவே இருப்பர். இலங்கை என்ற நாட்டிற்குள் தனித்துவமான இறைமை கொண்ட தமிழ்த் தேசத்தில் அதிக பெரும்பான்மையாக தமிழ்மக்கள் காணப்படுகின்றனர்.

ஆனால் தமிழ்த்தேசத்தின் இறைமையை மறுத்து சிங்கள தேசத்தின் இறைமையை மட்டும் கருத்திற் கொண்டபடி இலங்கைத்தீவிலுள்ள , எண்ணிக்கையில் அதிகமான சிங்கள மக்களோடு தமிழ் மக்களை ஒன்று கலக்கும் போது மொத்த சனத்தொகையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக ஆக்கப்பட தமிழ் மக்கள் தமது தனித்துவமான தேசம் என்ற தகுதியை இழந்து சிறுபான்மையினராகவும் ஆக்கப்படுகின்றனர்.

அத்துடன் தமிழ்த்தேசத்தில் மேற்கொள்ளப்படும் அரச ஆதரவுடனான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக தமிழ்த்தேசத்திற்குள்ளேயே தமிழ் மக்கள் சிறுபான்மையினராக மாற்றப்படும் பேராபத்தும் உண்டு.

இவ்வாறான சூழலில் ஜனநாயக நடைமுறைகளின்படி பெரும்பான்மை விரும்பும் விடயமே தீர்மானமாக நிறைவேறமுடியும்.அவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்கள் தமக்கேயுரித்தான தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்ற நிலைப்பாட்டை இழந்தால் அவர்கள் சிறுபான்மையாக மட்டுமே இருக்கமுடியும். அத்துடன் அவர்கள் விரும்பும் எந்தவொரு தீர்மானத்தையும் ஜனநாயக முறைப்படி நிறைவேற்றவே முடியாது.

அதேவேளை "இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களும் அனைவருக்கும் சொந்தம்" என்ற கோசத்துடன் சிங்கள மக்கள் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டுக் குடியேற்றப்படுவார்களாயின் அப்பகுதியில் பூர்வீகமாக வாழும் தமிழ் பேசும் மக்களை விட எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகக் கொள்ள முடியும். அத்துடன் ஜனநாயக முறைப்படி தாம் விரும்பும் எந்தத் தீர்மானத்தினையும் நிறைவேற்றிக் கொள்ளவும் முடியும்.

இந்த யதார்த்தம் சிங்கள தேசத்திற்கு நன்கு புரிந்திருக்கின்றமையினாலேயே 1940களில் இருந்து " காணி எங்கு இருக்கின்றதோ அங்கு தான் காணிகளை வழங்கமுடியும்" என்று கோசமிட்டவாறு தீவிரமான சிங்கள மயப்படுத்தலை வறண்ட பிரதேசக் குடியேற்றங்கள் என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளத் தொடங்கியது.

வறண்ட பிரதேசங்கள் என்பது தமிழர் தாயகப் பிரதேசங்கள் மட்டுமல்லமாறாக தென்மாகாணம், வடமத்திய மாகாணம் என்பனவும் கூட வறண்ட பிரதேசங்களேயாகும். இங்கும் ஏராளமான காணிகள்உள்ளன. இங்கும் பல குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. வடமத்திய மாகாணத்தில் பராக்கிரம சமுத்திரம் , மின்னேரியாக்குளம், கிரியத்தல குளம் என்பவற்றை மையமாகக் கொண்டு (1940 களில்) குடியேற்றத் திட்டங்களையும், தென்மாகாணத்தில் 1965 களில் உடவளவைக் குடியேற்றத் திட்டத்தையும், 1980 களில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான குடியேற்றத் திட்டங்களையும் அரசு நடைமுறைப்படுத்தியது. இவ்வாறு சிங்கள தேசத்தில் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு குடியேற்றத் திட்டத்திலும் தமிழ்த் தேசத்திலிருந்து மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு குடியமர்த்தப்படவில்லை. இதன்மூலம் அரசாங்கம் சிங்கள தேசத்தின் இன விகிதாசாரம் மாற்றமடையாமல் பார்த்துக் கொண்டது.

ஆனால் அதேகாலப் பகுதியில் தமிழ்த் தேசத்தில் மேற்கொள்ளப் பட்ட கல்லோயா, அல்லை , கந்தளாய் போன்ற அனைத்துக் குடியேற்றத் திட்டங்களிலும் சிங்கள தேசத்திலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியமர்த்தி தமிழ்த் தேசத்தின் இன விகிதாசாரத்தை குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரத்தைப் பெரிதும் மாற்றியமைத்தது. இது கடந்த காலங்களில் நடந்தது. இன்று வடமாகாணத்தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

குடியேற்றங்கள் என்பது ஒரு வழிப் பாதையல்ல. சிங்கள தேசத்து மக்கள் அரச ஆதரவுடன் தமிழ்த் தேசத்தில் குடியேற்றப்படுவார்கள். ஆனால் தமிழ்த் தேசத்து மக்கள் சிங்கள தேசத்தில் குடியேற்றப்படமாட்டார்கள் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.


உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமிழ் தேசத்தின் மக்களை அவர்களின் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றி மீண்டும் குடியேற விடாமல் அவர்களை அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் முடக்கி வைத்துக் கொண்டு சிங்கள தேசத்து மக்கள் தமிழ்த் தேசத்தில் எங்கும் சென்று குடியேறலாம் என்று அவர்களுக்கு அரசாங்கம் அழைப்பு விடுவதன் நோக்கம் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதேயாகும்.

வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்துள்ள இலங்கைத் தீவின் வடகிழக்கு பிராந்தியம் தமிழ் பேசும் மக்களுக்கு உரித்துடைய தாயகப் பிரதேசமாகும். அது அவர்களின் பிறப்புரிமை. இதனை மறுக்க சிங்கள அரசுக்கு எந்த உரிமையோ, அதிகாரமோ இல்லை. தமிழ் தேசத்தில் ஏனைய இனத்தவர்கள் குடியேற்றப்படலாமா? இல்லையா? என்பதனை தீர்மானிக்கும் உரிமை தமிழ்த் தேசத்திற்கு மட்டுமே உண்டு. இது தமிழ் தேசத்திற்குள்ள தனித்துவமான இறைமையின் வழிவந்த அதிகாரமாகும்.

தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்க சிங்கள தேசம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்து உறுதியுடன் மேற்கொள்ளும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வென்னும் போது, தமிழ்த் தேசத்திற்கு தனித்துவமான இறைமை உண்டு என்ற யதார்த்தம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப் பட்ட நிலையில் தமிழ்த்தேசமும் சிங்கள தேசமும் சம அந்தஸ்துடையவர்கள் என்ற நிலையில் இருந்து பேச்சுக் களில் ஈடுபட்டு இறைமையுள்ள இரண்டு தேசங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து ஒரு நாட்டுக்குள் வாழ்வது என்பது பற்றிய இறுதித் தீர்மானத்திற்கு வரவேண்டும்.

# காய்கள் – வெண்டைக் காய் ...



காய்கள், கனிகள் அனைத்தும் இயற்கையின் கொடையே. இதில் உடலுக்குத் தேவையான சத்துக்கள் அனைத்தும் நிறைந்துள்ளன. மனிதர்களின் அன்றாட உணவுத் தேவைகளில் காய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கொழுப்புச் சத்துக் குறைந்த விற்றமின் சத்துக்கள், தாதுக்கள் நிறைந்தவைதான் காய் கறிகள்.இவைகளை சமைத்து உண்பதால் உடலுக்கு வலு கிடைக்கும். இவை எளிதில் ஜீரணமாகும். மலச்சிக்கலைப் போக்கி நீண்ட ஆயுளைக் கொடுக்கும்.

இந்த இதழில் அனைவருக்கும் பரிச்சயமான வெண்டைக்காயின் மருத்துவக் குணங்களைப் பற்றி அறிந்துகொள்வோம்.

வெண்டைக் காயை ஏழைகளின் நண்பன் என்று கூடச் சொல்லலாம். சைவ உணவு உண்பவர்கள் அதிகம் சேர்க்கும் காய் கறியாகும். எல்லா இடங்களிலும் வளரக்கூடியது.

இது வெப்பமான பாகங்களில் பயிராகும். சிறு செடியாகக் காணப்படும். இதன் காய் சமையலுக்கு பயன்படுகிறது. இலை, விதை, மருத்துவத்திற்குப் பயன்படுகிறது.

### ஞாபகசக்தி

மனிதனுக்கு நினைவாற்றல் அவசியத் தேவையாகும். ஞாபக சக்தியை இழப்பது மனிதனுக்கு நோய் போன்றது. ஞாபக சக்தியைத் தூண்ட வெண்டைக்காயை சமையல் செய்து அடிக்கடி சாப்பிடவேண்டும் . இது மூளை நரம்புகளைத் தூண்டி அங்கு சுரக்கும் நாளமில்லாச் சுரப்பியை நன்கு சுரக்கச் செய்யும்.

பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு வெண்டைக்காயை எண்ணெயில் வதக்கி கொடுப்பது நல்லது . அவர்களின் வளர்ச்சியில் வெண்டைக்காய் முக்கிய பங்கு வகிக்கிறது.

### இரத்தம் சுத்தமடைய


இரத்தத்தை சுத்தமடையச் செய்து அதனைச் சீராக செயல்படச் செய்கிறது. இரத்தத்தில் கலந்துள்ள கொழுப்புப் பொருட்களைக் கரைக்கிறது. இரத்த அழுத்தத்தைப் போக்கி இதய அடைப்புக்ளைத் தடுக்கிறது. சிறுநீரகக் கோளாறுகளைப் போக்குகிறது. வயிற்றுக் கடுப்புடன் இரத்தம் வெளியேறுவதைத் தடுக்கிறது.

### மலச்சிக்கலைப் போக்கும்

மலச்சிக்கல் தான் நோய்க்கு மூலகாரணம். மலச்சிக்கலை போக்க வெண்டைக்காய் சிறந்த மருந்தாகும். இதில் அதிகளவு நார்ச்சத்து நிறைந்துள்ளதால் இவை உடலின் செரிமான சக்தியைத் தூண்டி மலச்சிக்கலைப் போக்கும்.

### வயிற்றுப்புண் ஆற

வயிற்றில் உண்டான புண்கள் ஆற வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.இதனால் வயிற்றுப்புண் எளிதில் குணமாகும். அஜீரணக் கோளாறு நீங்கி நன்கு பசியைத் தூண்டும்.



### சரும பாதிப்பு நீங்க

புறச்சூழ்நிலைகளால் பாதிக்கப்படும் சருமத்திற்கு வெண்டைக்காய் சேர்த்துக் கொள்வதால் சருமத்திற்கு பளபளப்பைக் கொடுத்து பாதிப்புக்களை நீக்குகிறது.

### குழந்தை நன்கு வளர

தினமும் பிஞ்சு வெண்டைக்காயை நன்கு கழுவி குழந்தைகளுக்கு சாப்பிடக் கொடுக்கலாம்.இது குழந்தைகளை அறிவு ஜீவியாக எதிர்காலத்தில் மாற்றும்.

### நீரிழிவு நோயாளிகளுக்கு

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வெண்டைக்காயை உணவில் அதிகம்உணவில் சேர்த்துக் கொண்டால் சீனியின் அளவு கட்டுப்படும்.

அதிக சீனி உடம்பில் கூடி விட்டால் வெண்டைக்காயை மூன்று துண்டாக நறுக்கி அதை குறுக்காக நறுக்கி இரவு முழுவதும் நீரில் ஊறவைத்து காலையில் நன்கு கலக்கி காயை எடுத்து விட்டு வெறும் வயிற்றில் அந்த நீரை மட்டும் அப்படியே குடித்து வந்தால் சீனியின் அளவு குறையும்.தேவைப்படும் போது இதைப் பயன்படுத்தலாம்.

### உடல் வலுப்பெற

உடல்சோர்வு, மனச்சோர்வு இருந்தால் மனிதன் நிரந்தர நோயாளிதான்.இதைப் போக்க வெண்டைக்காயை சமைத்து உண்டு வந்தால் உடல் வலுப்பெறும்.

வெண்டைக்காயை சிறிதாக நறுக்கி மோரில் கலந்து வெயிலில் காயவைத்து வத்தலாக செய்து அதை வறுத்து உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் வலுப்பெறும்.

நன்கு முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து அருந்தி வந்தால் உடல் வலு கிடைக்கும். மயக்கம், தலைசுற்றல் நீங்கும். சமைத்து உண்பதற்கு பிஞ்சு வெண்டைக்காய் சிறந்தது. 100 கிராம் வெண்டைக்காயிலுள்ள சத்துக்கள் சக்தி-31 கலோரி,கார்போஹைட்ரேட்-7.03 கிராம், சீனி-1.20கிராம், கொழுப்பு -0.10 கிராம், புரதம் -2.00 கிராம், நீர்ச்சத்து-90.17கிராம்.




# செல்போனால் ஆபத்து!



இன்று பட்டிதொட்டி கிராமங்கள் முதல் நகரங்கள் வரை மனிதனுக்கு உடை எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு செல்போனும் அத்தியாவசியமாகிவிட்டது.

சிலர் செல்போன் இல்லையென்றால் தூங்கமாட்டார்கள். எதையோ இழந்தது போல் தவிப்பார்கள். முன்பு அவசர தேவைகளுக்கு மட்டும் பேசக் கண்டறிந்த செல்போன் இன்று ஸ்டைலாகவும் அடிமைப்படுத்தும் அளவிற்கும் மாறிவிட்டது. உலக மக்கள் தொகையில் 80 சதவிகிதம் பேர் செல்போன் பயன்படுத்துகிறார்கள். இந்த ஆண்டு 5 மில்லியன் மக்கள் அகண்ட அலைவரிசை (Broad band) யின் மூலம் பயன்படுத்துவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் வளர்ச்சி ஒரு புறம் விரிந்துகொண்டே போவது நல்ல செய்திதான். உலகத்தை உள்ளங் கைகளுக்குள் கொண்டு வந்தது இந்த செல்போன்கள் தான்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்செயல் உண்டு என்ற நியூட்டனின் விதிக்கு ஏற்றாற்போல், இங்கு நல்ல பலன்களைக் கொடுக்கும் செல்போன்,பல தீய செயல்களுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழமொழிக்கேற்ப, அளவுக்கு அதிகமாக செல்போன் பேசுவதும், அதைப் பயன்படுத்தும் முறைகளாலும் மனித உடலுக்கு பல வகைகளில் பாதிப்பு உண்டாகும் என்று இன்றைய மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

செல்போனில் இருந்து வெளிவரும் மின்காந்த கதிரியக்கம் (Electro Magnetic radiation (EMR) உடலுக்கு பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அந்த மருத்துவ விஞ்ஞானிகளின் தகவல் அறிக்கை தெரிவிக்கிறது.

### 2 நிமிடம்...

செல்போன் 2 நிமிடம் பேசினால் அதனால் உண்டான மின் காந்த அதிர்வு மூளைக்குச் சென்று அரைமணி நேரம் வரை தங்கியிருந்து அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்கின்றனர். மேலும் செல்போனால் உண்டாகும் பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ள பல ஆலோசனைகளையும் தெரி விக்கின்றனர்.



### செல்போன் பேசும் போது...

செல்போனை தலையிலிருந்து 2முதல் 7 அங்குலம் வரை தள்ளி வைத்துக்கொள்ள வேண்டும். முடிந்த வரை பெரிய ஒலிப்பானை பயன்படுத்தி (Loud Speaker) பேசுவது நல்லது.இதனால் மின்காந்த கதிரியக்கத்தின் பாதிப்பு மூளைக்குச் செல்வதை தடுக்கலாம்.

### தூங்கும்போது...

நாம் தூங்கும்போது செல்போனை எங்கு வைக்கிறோம். தலையணைக்கு அடியிலா அல்லது தலைமாட்டிலா... செல்போனில் இருந்து வெளிப்படும் மின்னதிர்வுகளின் தூரம் குறைவதால்நம்மூளையைத் தாக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். அதனால், தூங்கும்போது, தலைமாட்டில் செல்போனை வைத்து தூங்குவதை தவிருங்கள். அல்லது அணைத்து விடுங்கள். அல்லது 6 மீற்றர் தூரம் தள்ளிவையுங்கள்.

### சட்டப்பையில்...

செல்போனை சட்டைப் பையில் வைக்கும் போது. அது இதயத்தின் மிக அருகில் இருக்கிறது. நம்முடைய இதய இயக்கம் மின்காந்த அதிர்வுக ளால் மாற்றம் அடையக்கூடியது. எனவே, செல் பொன் ஒலிக்கும் போது, அதிலிருந்து வரும் மின்காந்த அதிர்வுகள் நேரடியாக இதயத்தைப் பாதிக்கிறது.

கீபோட் வெளிப்பக்கம் இருக்கும்படி வைக்க வேண்டும்.அல்லது அணைத்துவிட்டு சட்டைப் பையில் வைக்கவேண்டும்.இதயத்துடிப்பு குறைபாடு உள்ளவர்கள் சட்டப்பையில் வைப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.

### கருவுற்ற பெண்கள்..

கருவுற்ற பெண்கள் செல்போன் உபயோகிப்பதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்கின்றனர் மருத்துவ விஞ்ஞானிகள். செல்போனிலி ருந்து வெளிவரும் மின்காந்த கதிரியக்கம் கருவில் உள்ள குழந்தையை பெருமளவில் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் காதுகேளாமை, வாய்பேச முடியாமல் போவது, உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி குன்றுதல் போன்ற பாதிப்புகள் உண்டாக வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

### பயணங்களின்போது...

விமானம்,ரயில், பேருந்து பயணங்கள் மற்றும்,பெற்றோல் நிரப்பு நிலையங்கள் இருக்கும் இடங்களில் செல்போன் உபயோகிப்பதைக் குறைக்க வேண்டும். ஏனெனில் மெட்டல் அதிகம் உள்ள பகுதிகளில் மின்காந்த கதிரியக்க சக்தி அதிகமாகும்.

செல்போனில் பேசுவதற்கு ஹெட்போனை உபயோகிக்கும் போது,மின்காந்த கதிரியக்கம், நேரடியாக காதுகளையும் மூளையையும் தாக்குகிறது.

### குழந்தைகள் மற்றும் சிறுவர்கள்...

15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் செல்போன் அதிகம் பயன்படுத்தினால், மூளையில் கட்டி ஏற்படும் அபாயம் உள்ளது. இது மரணத்திலும் கொண்டு போய்விடலாம்.

குழந்தைகளுக்கு அருகில் செல்போன் பேசுவதோ, வைப்பதோ கூடாது. இதிலிருந்து வெளிப்படும் மின்காந்த கதிரியக்கம் குழந்தைகளின் மென்மையான தசைக்குள் எளிதில் ஊடுருவி உட்சென்று பாதிப்பை ஏற்படுத்தும் .

புற்று நோய் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. மேற்கண்ட பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க செல்போன் அதிகம் பயன்படுத்துவதை தவிருங்கள். பொழுதுபோக்கிற்காக பேசுவதைத் தவிர்த்து தேவைக்கு மட்டும் பேசுங்கள். பாதிப்பும் இல்லை. பணவிரயமும் இல்லை.

நடக்கும் என்பார் நடக்காது.
நடகாக்கது என்பார் நடந்துவிடும்.

– தமிழ்ச் சினிமா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பேச்சுவார்த்தை நடக்கும் ஆனா! நடக்காது!

நடிகர் வடிவேலுவின் நகைச்சுவையில் ஒன்று, இன்றுவரை பிரபல்யம் பெற்றுள்ளது.

மாலைக் கண் வியாதியுள்ள ஒருவர் வாடகைக் கார் வைத்திருந்தார். வடிவேலு அவரிடம் வாடகைக்கு கார் வருமா? என்று கேட்கின்றார். அதற்கு, அந்தக் கார்ச் சாரதி வரும் ஆனா வராது என்று பதிலளிக்கின்றார்.

வரும் ஆனா வராது என்பதன் பொருள் அறியா வடிவேலு வாடகைக் காரில் ஏறிக் கொள்ள, மாலைப் பொழுதில் சாரதியின் கண் மறைப்பு பாரிய விபத்தை ஏற்படுத்தி விடுகிறது.

இதிலிருந்து வரும் ஆனா வராது என்பது மிகப் பெரும் நகைச்சுவைக்குரிய சொற்றொடராகிற்று.

இந்த நகைச்சுவை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைக்கும் சாலப் பொருந்தும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கூறினாலும் அது நடக்காதென்பதே நிஜம்.

பேச்சுவார்த்தை என்பது இப்போது தமிழ் மக்களை சாந்தப்படுத்தும் வார்த்தையாகி விட்டது.

அரசியல் புலத்தில் பல்வேறு வியாக்கியானங்கள் எழுகின்ற போதெல்லாம், பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் நடைபெறுவது போன்ற காட்டாப்பு.

இந்தக் காட்டாப்பை அப்பாவித் தமிழர்கள் நம்பி விடுவார்கள்.

இதைவிட மிகவும் அப்பாவித்தனமான தமிழ் அரசியல்வாதிகளும் பேச்சுவார்த்தை நடக்கப் போகின்றது. ஒரு மாதிரியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டால் எங்கள் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விடும் என்று நம்புகின்றனர்.

என்ன செய்வது! பேச்சுவார்த்தை நடக்கும் ஆனா நடக்காது என்பது நிஜமாக இருக்கும் நிலையில், பேச்சுவார்த்தையை நம்பி உற்சாகத்தை இழந்து போவதைத் தவிர வேறு எதுவும் நடக்க மாட்டா.

இலங்கை அரசைப் பொறுத்தவரை சர்வதேச அழுத்தத்தை தவிர்க்க வேண்டிய கட்டாயங்களில் பேச்சுவார்த்தை என்ற கொடியை தூக்கி உயர்த்தும்.

என்ன நோக்கத்திற்காக பேச்சுவார்த்தை கொடி உயர்த்தப்பட்டுள்ளதென்பதை புரிந்து கொள்ளாத நம் அரசியல் தலைமைகள் பேச்சுவார்த்தை நடக்கும் என நம்பி சர்வதேச அழுத்தத்திற்கு தூண்டுதல் போடாமல்அமைதி கொள்ளும்.

இந்த நிலைமையயே கடந்த காலங்களிலும் அனுபவித்துள்ளோம்.

என்ன செய்வது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதைவிட எங்களால் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டதாக இருக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், அரசுடன் இணைந்துள்ள தமிழ்த் தரப்புகளும் போட்டி போடும்போது, அரசின் சிந்தனை வேறு எங்கோ உள்ளது. அட! எங்கள் இனத்தின் குருதியில் கலந்து கொண்ட ஒற்றுமையீனம் எங்களை ஒருபோதும் உய்ய விடாது போலும்.

# யாழ். மாவட்டத்தில் கடமையாற்ற மருத்துவர்களுக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்ற வைத்திய அதிகாரிகளுக்கு மத்திய சுகாதார அமைச்சினால் விசேடமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பில் யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி வெளியிட்ட செய்யதிக்குறிப்பு வருமாறு,

தற்போது யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகளுக்கு மிக மோசமான பற்றாக்குறை நிலவுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட சுகாதார சேவைகளின் மேம்பாடு சம்பந்தமான விசேட கலந்துரையாடலில் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் பணியாற்றவிரும்பும் வைத்திய அதிகாரிகளுக்கென விசேட விண்ணப்பங்கள் கோரப்படுமென மத்திய சுகாதார அமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டபடி விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இதன்படி இலங்கையின் எப்பாகத்திலும் எந்தத்தரத்திலும் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தில் பணியாற்ற விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் 29 ஆம் திகதி ஆகும். இவ்விடயம் சம்பந்தமான சுற்றறிக்கையை மத்திய சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

யாழ்.மாவட்டத்தில் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகளான பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, பிரதேச வைத்தியசாலைகளாக சங்கானை, கோப்பாய், வேலணை, வல்வெட்டித்துறை, காரைநகர், நயினாதீவு, நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, புங்குடுதீவு, அச்சுவேலி, அனலைதீவு, அம்பன், கரவெட்டி, கொடிகாமம், மானிப்பாய், வரணி, மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளான தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, ஊர்காவற்துறை, கரவெட்டி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம். ஆகிய இடங்கள் காணப்படுகிறது.

யாழ்.மாவட்ட மக்கள் கடந்த 30 வருடங்களாக யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டனர். இதனால் பல வைத்தியசாலைகள் சேதமடைந்து வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன. தற்போது நாம் பெரும்பாலான வைத்திய சாலைகளை மீளக் கட்டியெழுப்பியுள்ளோம். இந்நிலையில் போதிய வைத்திய அதிகாரிகள் இல்லாமையினால் தரமான வைத்திய சேவையை வழங்கமுடியாதுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து கல்விகற்று மருத்துவர்களாக உயர்ந்த பல நூற்றுக்கணக்கானோர் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வருகின்றனர். 30 வருடங்களாக அல்லல்பட்ட இம்மக்களுக்கு எதிர்காலத்திலாவது தரமான மருத்துவ சேவையினை வழங்கவேண்டியது எமது தார்மீக கடமையாகும்.

தங்கள் சேவைக்காலத்தினை அடிப்படையாக வைத்து குறுகிய காலமேனும் இம்மாவட்டத்தில் வந்து பணியாற்றி உங்களது பங்களிப்பை வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

அமைதியான, சுமுகமான சூழல் நிலவும் இக்காலத்தில் எமது மக்களுக்கு சேவையாற்ற முன்வருமாறு பகிரங்கமாக பணிவுடன் அழைக்கின்றோம். மேலதிக விபரங்கள் அல்லது விளக்கங்கள் ஏதும் தேவைப்படின் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் 0212222278, 0212223725 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச–2)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய அதிபர்களுக்கு இன்று நடைபெறவிருந்த நிலையறி பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு நாளை புதன்கிழமை ஒரு மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும் என வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ச)

## உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

(யாழ்ப்பாணம்)

கே.ர.செல்லையா ஞாபகார்த்த அணிக்கு 5 பேர் கொண்ட 'புஸ்ரல்' உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் நாளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறுகின்றது.

மூன்றாவது முறையாக நடைபெறும் சுற்றுத் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிநேகபூர்வ பாடசாலைகள் கலந்து கொள்கின்றன.

இதில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி, இளவாழை ஹென்ரியரசர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகள் பங்கேற்கின்றன.

நாளைக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மாலை 3.30 மணிக்கு நடைபெறுமென யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் அறிவித்துள்ளார். (ச–5)

# தபாலக கட்டிடங்களின் புனரமைப்புக்கு 36 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு!

## தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் வடமாகாணத்தில் கட்டிட புனரமைப்புக்கென 36 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர 43 இலட்சம் ரூபாய் உபகரண கொள்வனவுக்காகவும் வாகன கொள்வனவுக்காக 15 மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தபால் தொலைத் தொடர்பு அமைச்சரின் செயலாளர் அசோகா ஜெயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.அஞ்சல் அலுவலகத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் அங்கு இடம்பெற்றநிகழ்வொன்றில்உரையாற்றும் போது இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், வடக்கின் வசந்தம் திட்டத்தின் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தபாலகங்கள் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர யாழ்.மாவட்ட தபாலகங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் அவ்வப் பகுதி தபால் நிலைய அதிகாரிகளால் முறையிடப்பட்டது.

அஞ்சல் பயிற்சிப்பட்டறைக்கு 5 கணனிகள் மிக விரைவில் வழங்கப்படும் உங்கள் பிரதேச அஞ்சல் அலுவலகங்களிலுள்ள குறைகள் தொடர்பாக தபால் தொலைத் தொடர்பு அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தரப்படும்.

இவை தவிர அடுத்த வருடம் ஜனவரி மாதம் ,3ஆம் திகதி சுங்கத் திணைக்கள செயற்பாடுகளும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச–6)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



ஒருமை நிலையைக் கண்டு பிடிப்பதுதான் அறிவியல். முழுமையான ஒரு நிலை கிட்டியதும் அறிவியல் மேலே செல்லாமல் நின்று விடும். ஏனெனில் அது தன் குறிக்கோளை எட்டி விட்டது. அது போலவே எந்த மூலப் பொருளிலிருந்து எல்லாப் பொருட்களும் படைக்கப்படுகின்றனவோ, அதைக் கண்டு பிடித்த பின்னர் வேதியியல் முன்னேற முடியாது. எந்த மூல சக்தியில் இருந்து எல்லா சக்திகளும் வெளிப்படுகின்றனவோ அதைக் கண்டறிந்ததும் இயற்பியல் நின்றுவிடும். மரணம் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில், மரணத்தைக் கடந்து நிற்கும் ஒரே உயிரைக் கண்டு பிடித்ததும், மாறிக்கொண்டேயிருக்கும் உலகில் மாறாத ஒரே அடிப்படையான அவனைக் கண்டு பிடித்ததும், எந்தவோர் ஆன்மாவிலிருந்து பிற ஆன்மாக்கள் வெளிப்படுவது போன்று மாயையால் தோன்றுகிறதோ அந்த ஆன்மாவைக்கண்டு பிடித்ததும், சமய விஞ்ஞானம் பூரணமாகி விடும்.

# அமெரிக்கா, இங்கிலாந்தில் நூதனமுறையில் தாக்குதல் நடத்த அல்கொய்தா சதித்திட்டம்

## இங்கிலாந்து உளவுத்துறை எச்சரிக்கை

(லண்டன்)

அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் மீண்டும் வெடிகுண்டு தாக்குதல்களை பெரிய அளவில் நடத்த அல்கொய்தா தீவிரவாதிகள் முயன்று வருகிறார்கள்.

பத்து நாட்களுக்கு முன்பு அல்-கொய்தா தீவிரவாதிகள் ஏமன் நாட்டில் இருந்து அமெரிக்காவுக்கு அனுப்பிய வெடிகுண்டு பொதிகளை பொலிஸார் கண்டு பிடித்து கைப்பற்றினார்கள்.

இந் நிலையில் கிறிஸ்துமஸ் தினத் தன்று இங்கிலாந்தில் நூதன முறையில் தாக்குதல்கள் நடத்த அல்கொய்தா தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பது தெரிய வந்துள்ளது. கிறிஸ்துமஸ் பொம்மைகளின் உட்பகுதியில் அதிநவீன வெடிபொருள் கலவையை வைத்து குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்க செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

குறிப்பாக இங்கிலாந்து நாட்டுக்குள் இந்த கிறிஸ்மஸ் பரிசு பொம்மைகளை ஏராளமாக அனுப்ப தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள கடைகளில் பரிசு பொம்மைகள் அடுக்கி வைக்கப்பட்ட பிறகு எந்த நேரத்திலும் அவை வெடித்து சிதறும் வகையில் தீவிரவாதிகள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அல்கொய்தா தீவிரவாதிகளுக்காக உலகம் முழுவதும் 23 கப்பல்கள் இயங்குவதை உளவுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர். இந்த கப்பல்கள் மூலம் கிறிஸ்துமஸ் பரிசுப் பொருட்கள் எளிதில் இங்கிலாந்துக்குள் சென்று விடும் என்று கூறப்படுகிறது.

அல்கொய்தாவின் இந்த சதி திட்டம் தொடர்பாக இங்கிலாந்து அரசை உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதையடுத்து லண்டனில் இப்போதே சோதனை நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. (ஸ்ரீ)

## 'ஜனநாயக பாதைக்கு திரும்புங்கள்' பிஜித்தீவுக்கு அமெரிக்கா அறிவுரை

(மெல்போர்ன்)

'பிஜித்தீவு நாடு ஜனநாயகப் பாதைக்கு திரும்ப வேண்டும்' என்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ஹிலாரி கிளின்டன் கேட்டுக் கொண்டுள்ளார். அவுஸ்திரேலியா சென்ற அவர் மெல்போர்ன் நகரில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில்,

பிஜித்தீவை ஜனநாயகப் பாதைக்குத் திருப்புவதற்காக அங்கு உள்ள இராணுவ ஆட்சியாளர்களை அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் வலியுறுத்தும் என்று குறிப்பிட்டார்

பிரதமராக தன்னைத்தானே நியமித்துக் கொண்ட பைனி மராமா உறுதி அளித்தபடி தேர்தலை நடத்த வேண்டும் என்று அவுஸ்திரேலியா கேட்டுக்கொண்டுள்ளது. (ஸ்ரீ)



புதுடில்லியில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள வந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வரவேற்பதையும் அருகில் பிரதமர் மன்மோகன் சிங் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இந்தியாவிலுள்ள தீவிரவாதிகளுக்கு நேபாள மாவோயிஸ்டுகள் பயிற்சி

(காத்மண்டு)

இந்தியாவில் உள்நாட்டு பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலாக இருக்கும் தீவிரவாதிகளுக்கு நேபாள மாவோயிஸ்டுகள் பயிற்சியளிக்கும் விவரம் தெரியவந்துள்ளது. இதற்கு பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத அமைப்பான லஷ்கர்- இ-தொய்பாவும் உதவி வருகிறது.

சமீப நாட்களாக இந்தியாவில் தீவிரவாத வன்முறைகள் அதிகரித்துள்ளதால் அவர்களால் உள்நாட்டு பாதுகாப்புக்கு பெரும் பிரச்சினையாகியுள்ளது.

இந்நிலையில் இந்தி யாவில் செயல்படும் தீவிரவாதிகளுக்கு நேபாள மாவோயிஸ்டுகள் பயிற்சியளித்து வரும் விவரம் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) மற்றும் இந்தியாவில் செயல்படும் தீவிரவாத அமைப்புகளில் ஒரு பிரிவான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) க்கும் உள்ள தொடர்புகளை அம்பலப்படுத்தும் விவரங்கள் அடங்கிய ஆவணங்களையும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரும் கடிதத்தையும் நேபாள அரசிடம் இந்தியா வழங்கியுள்ளது.

இந்திய தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் நேபாள மக்கள் விடுதலை இராணுவத்திடம் இந்திய தீவிரவாதிகள் பயிற்சி பெறுவது தொடர்பாக உளவுத்துறையினர் சேகரித்துள்ள விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பயிற்சிக்கு பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பா உதவுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்து விசாரணை நடத்துவதாக நேபாள அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என நேபாள மாவோயிஸ்டுகள் இதுவரை கூறி வந்தனர். அது பொய் என்பது தற்போது தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீரில் மாணவர்கள் உட்பட பலருக்கு ஆயுதப்பயிற்சி!

## பி.பி.சி. செய்திச் சேவை தகவல்

(லண்டன்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உட்பட ஏராளமான வெளிநாட்டவர்கள் ஆயுத பயிற்சி பெறுகின்றனர். இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்காக அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது என பி.பி.சி. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பி.பி.சி நிறுவனத்தின் உருது சேவைப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சிறிது காலம் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறைந்திருந்தன. தற்போது பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தலைநகரான முசாபராபாத் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரிக்க தொடங்கவிட்டன. இங்குள்ள பயங்கரவாத முகாம்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உட்பட ஏராளமான வெளிநாட்டவர்கள் பயங்கரவாத பயிற்சி பெறுகின்றனர்.

இந்தியாவுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்காக இந்த பயிற்சி அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# மியன்மார் பொதுத் தேர்தலை மேற்குலக நாடுகள் நிராகரிப்பு

(மியன்மார்)

மியன்மாரில் இடம்பெற்ற பொதுத் தேர்தலை மேற்குலக நாடுகள் நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் மியன்மாரில் இடம்பெற்ற பொதுத் தேர்தல் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையப் பெறவில்லை என மேற்குலக நாடுகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தேர்தல் சுதந்திரமானதாகவோ அல்லதுநியாயமாகவோநடைபெறவில்லைஎன்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தல் சர்வதேச தரங்களுக்கு அமையய நடைபெறவில்லை என வும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்த வாக்கெடுப்பு மீண்டுமொரு சர் வாதிகார ஆட்சி முறைமைக்கு வழிகோலி யதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கூறியுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவான கட்சிகள் இந்தத் தேர்தலில் வெற்றியீட்டும் என எதிர்பார்க்கப்படுவதோடு எவ்வாறெனினும் இந்தத் தேர்தலில் ஆங் சான் சூகியின் பிரதான எதிர்க்கட்சி போட்டியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாக்களிப்பில் அதிகளவானோர் கலந்து கொள்ளவில்லை எனக் குறிப்பிடப்படுகி ற து. (ஸ்ரீ - 2)

# கடந்த 11 மாதங்களில் அமெரிக்காவில் 141 வங்கிகள் மூடப்பட்டுள்ளன


(நியூயோர்க்)

அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி நீடித்து வருவதால் கடந்த 11 மாதங்களில் 141 வங்கிகள் மூடப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் சில ஆண்டுகளாக பொருளாதார மந்த நிலை நீடித்து வருகிறது. இதனால் வேலை வாய்ப்பு மற்றும் வங்கி உள்ளிட்டவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின.

அமெரிக்காவில் பொருளாதார மந்த நிலை காரணமாக கடந்த 11 மாதங்களில் 141 வங்கிகள் மூடப்பட்டுள்ளன. கடந்த ஒக்டோபரில் 12 வங்கிகளும் செப்டெம்பரில் 7 வங்கிகளும் மூடப்பட்டன. ஓகஸ்டில் 10 வங்கி கள் மூடப்பட்டன. பொருளாதார மந்தநிலை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர வங்கிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. வேலையில்லா திண்டாட்டமும் 10 சதவீத அளவில் நீடித்து வருகிறது. (ஸ்ரீ)

# உலகின் அதிசக்தி வாய்ந்த மனிதர்களின் பட்டியலில் பில்கேட்ஸ்க்கு முதலிடம்

(லண்டன்)



உலகின் அதிக சக்தி வாய்ந்த மனிதர்கள் பட்டியலில் 'மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸ் முதலிடம் பிடித்துள்ளார்.

உலகின் தலை சிறந்த 40 பேரின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டது. அதில் தொழில்நுட்ப உலகின் முன்னணியில் இருப்பதுடன் தனது பவுண்டேஷன் மூலம் ஏழை எளியவர்களுக்கு உதவிவரும் பில்கேட்ஸ் முதலிடம் பிடித்தார்.

இந்த வரிசையில் ரொபர்ட் முர்டாக், கிலாரி கிளின்டன், ஆப்பிள் நிறுவன தலைவர் ஸ்டீவ் ஜாப்ஸ், கூகுளின் லாரி பேஜ் மற்றும் சர்ஜெய் பிரின் சோசியல் நெட்வொர்க் தலைவர் மார்க் ஷகர்பெர்க் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இங்கிலாந்து அரச குடும்பம் பேஸ்புக்கில் இணைந்தது

(லண்டன்)

இங்கிலாந்து அரச குடும்பத்தை சார்ந்தவர்கள் சமூக இணையத்தளமான பேஸ்புக்கில் புதிதாக இணைந்துள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு அரச குடும்பத்தினர் மைக்ரோ பிளாக் தளமான டிவிட்டரில் இணைந்து தொடர்ந்து அதை பயன்படுத்துகின்றனர்.

பின்னர் யூ டியூபிலும் இணைந்து வீடியோ படங்களை வெளியிட்டு வருகின்றனர். இதையடுத்து தற்போது பேஸ்புக்கிலும் இணைந்து கருத்துக்களை பரிமாறவுள்ளனர்.

அத்துடன் இரண்டாம் எலிசபெத் ராணியின் பேச்சுகள் புதிய வீடியோக்கள், படங்களையும் வெளியிடுகின்றனர். மேலும் சார்ள்ஸ் அவரது மகன்கள் வில்லியம் , ஹரி உட்பட அரச குடும்பத்தை சார்ந்த உறுப்பினர்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஹர்பஜன் சதம்; இந்தியா கௌரவம்

# முதல் டெஸ்ட் சமனிலையில் முடிபு



(அகமதாபாத்)

ஹர்பஜன் சிங் கன்னிச் சதமடித்து அசத்த இந்திய அணி முதலாவது டெஸ்ட் போட்டியை சமனிலையாக்கியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 4ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணச் சுழற்றியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 487 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 82 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு லக்ஸ்மன்-ஹர்பஜன் ஜோடி வலுவான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் வி.வி.எஸ் லக்ஸ்மன் 154 பந்துகளிலும் ஹர்பஜன் சிங் 78 பந்துகளிலும் அரைச் சதம் கடக்க இந்திய அணி 150 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடியைப் பிரிக்க நியூசிலாந்து அணித்தலைவர் விக்டோரி பந்துவீச்சில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தபோதும் பலனளிக்காமல் போக இந்திய அணி 200 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இதில் வி.வி.எஸ் லக்ஸ்மன் 253 பந்துகளில் (9பவுண்டரிகள் உட்பட) 91 ஓட்டங் களை எடுத்தபோது விக்டோரியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ என்ற நடுவர் டேவியின் சர்ச்சைக்குரிய தீர்ப்பின் மூலம் ஆட்டமிழந்தார்.

அடுத்துகளமிறங்கிய சகீர்க்கான் பூச்சியத்துடன் வந்த வேகத்தில் ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து வந்த ஓஜா நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஹர்பஜன் சிங் 193 பந்துகளில் (11 பவுண்டரிள், 3 சிக்ஸசர்கள் உட்பட) 115 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 266 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரஜன் ஓஜா ஆட்டமிழக்காது 9 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் கிரிஸ் மார்ட்டீன் 5 விக்கட்டுக்களையும் அணித்தலைவர் டானியல் விக்டோரி, ரோஸ் ரெய்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் போட்டி முடிபடைவதற்கு 24 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் 295 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூஸ்லாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 10 ஓவர்களில் ஒரு விக்கெட்டையிழந்து 22 ஓட்டங்களை எடுத்தபோது இரு அணிகளினதும் தலைவர்களின் ஒப்புதலுடன் ஆட்டம் சமனிலை என அறிவிக்கப்பட்டது.

இதில் மக்குலம் 11 ஓட்டங்களையும் வோற்லிஸ் 2 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

இப்போட்டியில் சதமடித்து இந்திய அணியை தோல்வியிலிருந்து மீட்டெடுத்த ஹர்பஜன் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சிறப்புற நடந்த

# 'நாட்டிய மயில்-2010' நடனப் போட்டி





(யாழ்ப்பாணம்)

இயு லங்கா போரம் (Eu Lanka Forum) நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாட்டிய மயில் 2010 நடனப் போட்டியானது திட்டமிட்டவாறு 06.11.2010 அன்று, காலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன், Eu Lanka Forum நிறுவனத்தின் தலைவர் M.T.S. இராமச்சந்திரன் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



முதலில் கல்லூரி அதிபர் திருமதி பேரின்பநாதன் மற்றும் Eu Lanka Forum நிறுவனத்தின் தலைவர் M.T.S. இராமச்சந்திரன் ஆகியோருடன் ஓய்வு பெற்ற நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி ச.காங்கேயன், நடனப் போட்டிக்கு விசேட நடுவர்களாக வருகை தந்திருந்த திருமதி நந்தினி சிவராஜன், திருமதி பவானி குகப்பியா, செல்வி லக்ஷ்மி சுப்பிரமணியசர்மா மற்றும் சிறப்பு விருந்தினர்களான விவாகப் பதிவாளர் திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் சறா புவனேஸ்வரன் ஆகியோருமம் மங்கல விளக்கினை ஏற்றிவைத்தனர்.

Eu Lanka Forum நிறுவனத்தின் நாட்டிய மயில் 2010 நடனப் போட்டிக்கான விசேட ஆலோசகராக திருமதி அபிராமி காண்டீபன் பங்களிப்பு வழங்கியமை சிறப்புக்குரியது . அத்துடன் இப்போட்டிக்கான விசேட நடுவர்களாக வருகைதந்திருந்த யாழ். இராமநாதன் கல்லூரி பிரதி அதிபர் பரத சூடாமணி திருமதி நந்தினி சிவராஜன், கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை நாட்டியக் கலைமணி திருமதி பவானி குகப்பிரியா, சென்னை கலாஷேத்ரா பட்டதாரி செல்வி லக்ஷ்மி சுப்ரமணியசர்மா அவர்களும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந் நடனப்போட்டியில் போட்டியாளர்களாக செல்வி நிஷாதரணி இராஜேஸ்வரன், பாதுஜா தர்மதேவன், தனபாலசிங்கம் சசிகரன், பவித்திரா தயாபரன், கேதீஸ்வரி இராஜசேகரம், கணபதிப்பிள்ளை கருணானந்தன், சண்முகதாசன் நிஷாந்தி ஆகியோர் பங்குபற்றினர்.

போட்டியின் மறுநாள் நிகழ்வும் 07.11. 2010, ஞாயிற்றுக்கிழமை தொடர்ந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அன்றையதினம் போட்டியாளர்களாக செல்விகள் ஸ்ரீனிவாசன் ஆரணி, சண்முகநாதன் மதுரா, குலசிங்கம் சுகாஜினி, தர்சனா பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டியமயில் 2010 நடனப் போட்டியின் கால் இறுதிச் சுற்றில் தனபாலசிங்கம் சசிகரன், பவித்திரா தயாபரன், சண்முகதாசன் நிஷாந்தி, தர்சனா பாலசுப்பிரமணியம், கேதீஸ்வரி இராஜசேகரம், சண்முகநாதன் மதுரா ஆகிய போட்டியாளர்கள் நடுவர்களால் அரையிறுதிப் போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியின் முடிபுகள் அன்றைய தினம் பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது Eu Lanka Forum நிறுவனத்தின் தலைவர் M.T.S. இராமச்சந்திர னால் உத்தியோக பூர்வமாக உறுதி செய்யப்பட்டது. அரையிறுதிப் போட்டிமற்றும் இறுதிப் போட்டி பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

2005ம் ஆண்டில் நடைபெற்ற நாட்டிய மயில் போட்டியில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்துகொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதேபோல, இந்த வருடமும் நாட்டியமயில் 2010 நடனப்போட்டியின் இறுதி நிகழ்வின் போது அமைச்சர்கள் பலரும் ஜனாதிபதியின் தலைமையில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

**Eu Lanka Forum**
நிர்வாகத்தினர்

விமர்சனப் பார்வை

## வெலிக்கடை மோதல் குறித்து விசாரிக்குமாறு சி.ஐ.டிக்கு உத்தரவு

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதல் தொடர்பாக விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சி.ஐ.டி)கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. வெலிகடைச் சிறைச்சாலையில் தேடுதலை ஆரம்பித்தபோது கைதிகள் பொலிஸாரை தாக்கி தேடுதல் நடவடிக்கையை தடுத்ததாகவும் பொலிஸ் சார்ஜன்ட் செனரத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசாரணை பொலிஸாரிடமிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வடக்கில் போலி விதை இனங்களை வழங்கிய அரச சார்பற்ற நிறுவனம்

### விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட விதை இனங்களை பயிரிட்ட விவசாயிகள் நட்டமடைந்த சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில் உள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதையினங்களை வழங்கியது.

அதனைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் அதிகளவு பணத்தை செலவு செய்து பயிரிட்டபோதும் அவை வளர்ச்சியடையவில்லை.

அதன்பின்னர் அவ்விதை இனங்கள் குறித்து ஆராயப்பட்டபோது அவை பயிரிடுவதற்கு உகந்தவையல்ல எனக் கண்டறியப்பட்டது.

இவ் விதையினங்களை பெற்ற கோப்பாய் மற்றும் தெல்லிப்பழையைச் சேர்ந்த விவசாயிகளே யாழ்ப்பாணத்தில் பாதிப்படைந்ததாக சுட்டிக்காட்டப்பட்டது.

பயிரிடுவதற்கு உகந்ததல்லாத விதையினங்களை வழங்கியதன் மூலம் அவ் அரச சார்பற்ற நிறுவனத்துக்கு சுமார் 5 மில்லியன் ரூபாய் இலாபம் ஏற்பட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை விதை இனங்களை வழங்கிய அரச சார்பற்ற நிறுவன அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட போதும் படையினரின் பிரசன்னத்தால் அது கைவிடப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஏ)

## யாழ். பொதுநூலகத்...

உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் சில தீர்மானங்கள் எடுக்கப் பட்டு அவற்றை அமுல்படுத்துவது என முடிபெடுக்கப்பட்டது. அவை பின்வருமாறு,

யாழ்.நூலகத்தை திங்கட்கிழமை மற்றும் பொது விடுமுறைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 5.00 மணி தொடக்கம் 6.30 மணி வரையான ஒன்றரை மணி நேரம் பார்வையிட அனுமதிக்கப்படும். இந் நேரத்துள் 25 பேர் வீதம் உள்ளே சென்று பார்வையிட முடியும். பார்வையிடச் செல்லும் போது புகைப்படக்கருவிகள், கைபைகள், கைதொலைபேசிகள் என்பவற்றை கொண்டு செல்ல முடியாது.

அத்துடன் அங்குள்ள நூல்களை அனுமதியின்றி எடுத்தல், தொடுதல் எனபனவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மீறுபவர் மீது தண்டப் பணம் அறவிடப்படும்.

நூலகத்தில் கடமையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளவிக்காத வண்ணம் பார்வையிட வேண்டும்.

நூலகத்தின் செயற்பாட்டை பார்வையிடவென கண்காணிப்புக் கமராக்களை விரைவில் பொருத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ச-51)

## இலங்கைத் தமிழ் அக...

சித்திரவதை என்பவற்றுக்குள் உள்ளாவதாக அந்த ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்களை அந்த ஆணைக்குழு 75 பக்கங்களிலான அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் அகதிகளை தடுத்து வைத்திருப்பது மனித உரிமைகள் கடுமையாகமீறும்செயல்என அந்த ஆணைக்குழு விபரித்துள்ளது.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானிய அகதிகளுக்கான அடைக்கல கோரிக்கையை காலதாமதம் செய்வதன் மூலம் அவுஸ்திரேலியா அவர்களின் தடுத்து வைத்தல் காலத்தை நீடிப்பதாக அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகளை சுகாதாரம் மற்றும் ஏனைய சட்டமுறைகளுக்காகவே கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்புவதாக அந்த நாட்டின் அரசாங்கம் கூறுகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று கிறிஸ்மஸ் தீவுக்கு சென்று வந்த சர்வதேச மன்னிப்பு சபையின் குழுவினர் குறித்த முகாம்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக்கள் நாட்டின் உறுதித் தன்மையற்ற நிலையை எடுத்துக் காட்டுவதுடன் அவுஸ்திரேலியாவின் அகதிகள் பாதுகாப்பு என்ற பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## கூட்டமைப்புடனான...

மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திப்புக்கான திகதி தீர்மானிக்கப்பட்டதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவிக்கப்படும். அந்த வகையில் விரைவில் ஆளும் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சந்திப்பின்போது இடம் பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்ற விடயம் மற்றும் மீள்குடியேற்றப்பட்டுள்ளவர்களுக்கான வசதிகள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று தெரிகிறது. வடபகுதிக்கான அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் பேசப்படும்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அலரி மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இவர்கள் இருவரும் எவ்வித உதவியாளர்களும் இன்றி அரை மணித்தியாலத்துக்கு மேலாக ஆலோசனை நடத்தியதாகவும் இப் பேச்சுவார்த்தை மிகவும் திருப்திகரமானதாக அமைந்ததாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (ச-5)

## உயர் பாதுகாப்பு...

இதனால் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக உள்ள இடங்களில் குடியிருந்தவர்களுக்கு பொருத்தமான மாற்றுக் காணி அல்லது உரிய நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் குடியிருந்த சிங்கள மக்களின் காணிகள் அடையாளம் காணப்பட்டவுடன் அவர்கள் மிக விரைவில் அந்தந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (ச-5)

## புதிய திட்...

சாலைகளின் அபிவிருத்தி, விவசாய நடவடிக்கைகளுக்கான உதவிகள் போன்றனவற்றை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (ஏ)

## அரசுடன் இணைந்...

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்புப் பெற்றுக்கொள்ளப்படும்.

யுத்த காலப் பகுதியில் அதிகளவான புலம்பெயர் தமிழர்கள் ஆதரவாக செயற்பட்ட போதிலும், தற்போது நிலைமை மாறியுள்ளது.


தற்போது புலம்பெயர் தமிழர்களுக்கு இடையில் வித்தியாசமான நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

அவர்கள் அரசுடன் இணைந்து செயற்பட விருப்பம் கொண்டுள்ளனர் என்றார். (ச-5)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தேவராசா

(கட்டுவன் மேற்கு)



வறுத்தலைவிளான், கட்டுவன் வடக்கு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடி, கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தேவராசா அவர்கள் நேற்று (08.11.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், தங்கரத்தினம் தம்பதியினரின் மருமகனும், மல்லிகாதேவியின் ஆருயிர்க் கணவரும், தேவரஞ்சினி (ஜேர்மனி), தேவவிநோதன் (சாரதி, றூபா பன்முக வர்த்தகம், யாழ்ப்பாணம்), தேவகி, தேவஜான்சினி (பிரான்ஸ்), தேவகவிதா (பின்லாந்து), தேவமயூரன் (மயூரன், பிரான்ஸ்), தேவசுதாகர் (சூட்டி, ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகரட்ணம் (ஜேர்மனி), நித்தியரூபி (ஆசிரியை, யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை), சத்தியேந்திரா (பிரான்ஸ்), சிவசுதன் (பிரான்ஸ்), தவராஜ் (பின்லாந்து), றொஷாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மினி, தர்ணிகா, சஸ்மிகன், சஜீவனா, மகிஷனன், நர்த்தனன், மதுஷன், நிதுஷன், ஜஸ்மிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, சற்குணநாதன், குணரத்தினம், தியாகராசா மற்றும் சிவனேசமணி (கனடா), செகராசா, சிவஞானமணி (கனடா), செல்வராணி (கனடா), செல்வராசா (லண்டன்), சிவராசா (லண்டன்), ரஜனி (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, புஸ்பராணி, மகேந்திரராசா, சந்திரகுலராசா (ஜேர்மனி), மதிவதனராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உயத்தி ஒடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் கோவிலடி,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்

(282)

## ஐ.நா.பாதுகாப்பு கவு...

மூன்றுநாள் இந்தியப் பயணத்தின் நிறைவாக இந்திய நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

மிகச் சில உலகத் தலைவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் அந்த கௌரவத்தை மன்மோகன் சிங் அரசு ஒபாமாவுக்கு வழங்கியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள நாடுகளில் சீனா தவிர்த்து ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆகுவதற்கு ஆதரவு தெரிவிக்கும் நிலையில் அமெரிக்கா இதுவரை தயக்கம் காட்டி வந்தது. ஒபாமா தனது பயணத்தின்போது இது தொடர்பாக அறிவிப்பு வெளியிடுவார் என்று இந்திய ஆட்சியாளர்களிடம் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

இந் நிலையில் தற்போது அந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் ஒபாமா.

இதேவேளை காஷ்மீர் பிரச்சினையில் எந்தத் தீர்வையும் திணிக்க அமெரிக்க விரும்பவில்லை என்றும் அதே நேரத்தில் இருநாடுகளும் விரும்பினால் பதற்றத்தை குறைப்பதற்கான எந்தவித பங்களிப்பையும் ஆற்ற அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் பயங்கரவாதம் கலந்த அழுத்தத்தை பாகிஸ்தான் நிறுத்தினால் அந்தநாட்டுடன் அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களும் நேற்று டில்லியில் கூட்டாக செய்தியாளரை சந்தித்த போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்திருந்த ஜனாதிபதி பராக் ஒபாமா திங்கட்கிழமை காலை டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதையடுத்து இரு நாடுகளுக்கு மிடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதன் பிறகு இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினார்கள். (ச-5)

உடன் தேவை

பிரபல்ய வர்த்தக நிலையத்திற்கு பில்கிளார்க் உடன்தேவை. வயது நாற்பதிற்கு மேற்பட்டவர்கள் ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:021 225 5090 (2822)

மாதாந்தம் ரூபா 30,000.00 ஐ விட அதிக சம்பளத்துடன் வாழ்வில் முன்னேறத் தயாராகுங்கள்!!!

'எடிசலாட்' விற்பனை (Post paid) மேம்பாட்டு அதிகாரி

- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
- நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
- தொழிற் பயிற்சிகள் , சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
- இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி , வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?

அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள்தான்!

- சுயமாக தயாரித்த சுயவிபரக் கோவையுடன், ( BIO-DATA)
- வார நாட்களில் மு.ப.08.30-பி.ப.02.00 மணிவரை
- கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(கி-1557)

விபரங்களுக்கு அழையுங்கள்
Mr.H.Mohamed
07 22 465478

விரைந்து வாருங்கள்
R&R TELECOM JAFFNA (PVT) LTD
127,MPCS BUILDING
K.K.S.ROAD,JAFFNA. 021 2221644

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.